# அல்ஹக்கு 1 – Al Haque 1

*உர்தூமூலம்:* **அஷ்ஷெய்கு முஹம்மது அப்துல் காதிர் ஸூபி ஹஜ்ரத் ஹைதராபாதி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்**. ***In Urdu:*** **Sulthanul Vaizeen As-Sah Muhammad Abdul Quadir Sufi Hazrath Hyderabai Kadasallahu Sirrahul Azeez.**

*தமிழில்:* **ஷெய்குல் காமில் ஷெய்கு அப்துல் காதிர் ஸூபி ஹஜ்ரத் காஹிரி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்கள்**. ***In Tamil:*** **As-Shaikhul Kamil Shaikh Abdul Quadir Sufi Hazrath Kahiri Kadasallahu Sirrahul Azeez.**

الحمد لله رب العالمين والصلوة والسلام على رسوله سيدنا محمد واله وصحبه اجمعين.

***அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன். வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரஸூலிஹி ஸெய்யிதினாமுஹம்மதின் வ ஆலிஹி வ ஸஹ்பிஹி அஜ்மஈன்.***

சிறப்புறுங் காதிரிய்யா, நக்ஷபந்தியா, ரியாயிய்யா, அக்பரிய்யா, ஜிஷ்திய்யா, முஜத்திதிய்யா முதலிய தரீக்காக்களில் ஐதுபு, ஸுலூக்கு வழிகளில் எமக்கு தீட்சையும், கிலாபத்தும் தந்தருளிய எமது ஞானபிதா ஆரிபீன்களின் இமாம் வாயிழீன்களின் ஸுல்தான், மஜ்தூபீன்களின் தலைவர், மெஞ்ஞானச் சமுத்திரம் ஹஜ்ரத் மௌலானா மௌலவி ஷாஹ் முஹம்மது அப்துல் காதிர் ஸூபிய்யில் ஹைதராபாதிய்யி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களின் அதி அற்புதமான மெஞ்ஞானப் பொக்கிஷங்களாம் அரபி, உர்து நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டுமென்ற ஆவல் எமக்கும் பன்னெடுங் காலமாக இருந்து வந்தது. அந்த ஆவலை தற்போது ஹஜ்ரத்தவர்களின் 'அல்ஹக்கு' என்ற உர்து நூலையும், அவர்களது தரீக்கத்து சகோதரர் காமரான் வயர்லெஸ் சூப்பிரின்டெண்டு ஜனாப். மௌலவி இல்யாஸ்கான் சாஹிபு அவர்களுக்கு எழுதிய பல அற்புத தத்துவப் போதனைகளைக் கொண்;ட ஞானத்த தபாலையும் மொழி பெயர்த்து இப்போது வெளியிடுவதற்கு நல்லுதவி செய்ததின் மூலம் நிறைவேற்றியருளிய ஹக்குத் தஆலாவுக்கு சர்வ புகழும் உரித்தாகுக.

இவற்றின் மொழி பெயர்ப்புக்களை வெளியிட வேண்டுமென்று எம்மைத் தூண்டி வந்து, இதற்காகப் பெருமுயற்சி எடுத்து மாசக்கணக்கில் நமதூரில் தங்கி, விடாது வேலை வாங்கி, இதைப் பூர்த்தி பண்ணுவதற்கு மூலக்கராணமாக அமைந்துள்ள ஆத்மீகச் சகோதரர் ஆலிஜனாப் கொடிக்கால்பாளையம் அ.த. அப்துல் மஜீது ஸூபி அவர்களுக்கும், இத்துறையில் அன்பாதரவாயிருந்து உற்சாகப்படுத்தி உதவிய சகோதரர்களுக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சுத்த மெஞ்ஞானப் பொக்கிஷமான இந்நூலாசிரியப் பெம்மானைப் பற்றி அறிமுகப்படுத்திதான் தெரியவேண்டுமென்பதில்லை. வட இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் ஹைதராபாத் ஸூபி ஹஜ்ரத் என்ற சிறப்புப் பெயருடன் புகழ் கொண்டிலங்கிய அவ்வண்ணலின் மகிமை நாடெங்கும் பரவியுள்ளது. அவர்கள் மேன்மைக்குரிய ஹஜ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ்



www.sufimanzil.org

திஹ்லவீ ரஹிமஹுல்லாஹ் அவர்களுடைய நான்காவது கலீபாவாக இருக்கிறார்கள். சங்கைக்குரிய மதராஸ், பெரம்பூர் ஜமாலியா மத்ரஸா, மாஜி ஸத்ரு முதர்ரிஸ் மதார் சாகிபு ஹஜ்ரத் அவர்களுக்கும், வேலூர் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்து மத்ரஸா மாஜி ஸத்ரு முதர்ரிஸ் அப்துல் ஜப்பார் ஹஜ்ரத் அவர்களுக்கும் ஷெய்கு – ஞானத்தந்தையாக இருக்கிறார்கள். மௌலானா மௌலவி அப்துல் ஜப்பார் ஹஜ்ரத் அவர்கள் இம்மஹானின் மற்றொரு நூலான (ஸுவால்,ஜவாப்) வினா,விடை ரூபத்தில் எழுதப்பட்டுள்ள '**அல்ஹக்கு**' என்ற உருது நூலை அரபியில் மொழிபெயர்த்து அதை அண்ணலவர்களிடம் காணிக்கையாக சமர்ப்பித்து பைஅத்துப் பெற்றுள்ளார்கள். அவ்வமயம் ஹைதராபாத் ஹஜ்ரத்தவர்கள் மீது புகழ்மாலையாக அரபியில் ஒரு கஸீதா (பாமாலை) கூறியுள்ளார்கள். அதன் முதல் சீர் '**அலா அய்யுஹஷ்ஷைகுல் வலீ**' என்பதாகும். தொடர்ந்து அவர்கள் கூறியவற்றில் சிலவற்றை இங்குக் குறிப்பிடுதல் நலம். மேன்மை மிக்க ஷெய்கு வலியுல்லாஹ் அவர்களே! இக்காலத்திய உலமாக்களிடையே நிகரில்லாத சம்பூரணப் பிரகாசமுடைய சூரியனாகத் தாங்கள் இலங்குகிறீர்கள். அஸ்ராரு (அகமியங்)களுடைய ஞானப் பெம்மானாயிருக்கிறீர்கள். வலிமை நிறைந்த ரப்புடைய மள்ஹராக நீங்களிருக்கிறீர்கள். ஷெய்குனா அப்துல்காதிர் ஜீலானி அவர்களுடைய திருநாமம் பூண்டவர்களாக இருக்கிறீர்கள். எந்த ராஜனும் பெரிய மனிதனும், சீமானும் தரமுடியாத மாபெரும் பேரின்பப் பாக்கியங்களையெல்லாம் எங்களுக்கு நீங்கள் அளித்துள்ளீர்கள். விரோதிகளின் பேரில் நீங்கள் 'ஹக்கு' என்ற (உண்மை சத்திய) வாளைக் கொண்டு அடர்ந்தேறி அந்த அழிச்சாட்டியக்காரர்கள் மெஞ்ஞானி (ஸூபிய்யாக்)கள் பேரில் செய்த குதர்க்கங்கள் அனைத்தையும் ஒழித்துக் கட்டி விட்டீர்கள். உங்களிடத்தில் அவுலியாக்களுடைய ரூஹு (ஆத்மாக்)களெல்லாம் வருகின்றன. நீங்கள் இக்காலத்திய ஸூபியாக்களுடைய நாயகமாகிய பரிசுத்தமான ஜுனைதுல் பக்தாதி ரஹிமஹுல்லாஹுவாக இருக்கிறீர்கள்...' என்று இத்தகைய மாபெரும் பாராட்டுக்களைக் கொண்டு ஹைதராபாத் ஸூபி ஹஜ்ரத்தவர்களை கனம் ஜப்பார் ஹஜ்ரத் அவர்கள் புகழ்ந்துள்ளார்கள்.

மேலும், இவர்களைப் பற்றி சங்கை மிகுந்த படேசாஹிபு என்ற குத்பு ஷைகு அஹ்மது பதுருத்தீன் ஹஜ்ரத்தவர்கள், மேன்மைமிக்க உஸ்தாதுனல் அக்ரம் (எமது ஆசிரியப் பெரியார்) புதக்குடி அப்துல் கரீம் ஹஜ்ரத் ஸூபி ரஹ்மத்துல்லாஹ் அவர்களுக்கு தகவல் கொடுத்தபோது, 'முஹிய்யித்தீன் வருகிறார். பலனடைந்து கொள்வீர்களாக' என்று வரைந்துள்ளார்கள்.

ஷெய்கு படே சாஹிபு ஹஜ்ரத்தவர்கள், ஹைதராபாத் ஸூபி ஹஜ்ரத்தவர்களுக்குச் சென்னை இல்லத்தில் ராஜோபசார விருந்தொன்றளித்தார்கள். பூமியில் அவர்கள் நடந்து வருவதற்காக விலையுயர்ந்த துணியை விரித்து வரவேற்புச் செய்து உபசரணை செய்து கௌரவித்தார்கள். அவ்வமயம் ஸூபி ஹஜ்ரத்தவர்களை ஷெய்கு படே சாஹிபு ஹஜ்ரத்தவர்கள் இறுகக் கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்து 'ஆப்கு கௌது பனாயா-ஆப்கு கௌது பனாயா' (உங்களை கௌதாக்கி விட்டான்) என்று சோபன மொழி நவின்றுள்ளார்கள். இத்தகைய அகமியம் நிறைந்த மகான் அவர்களின் ஆத்மீகத் தொடர்பைப் பெற்றவர்கள் நற்பாக்கியசாலிகளே.

மகானவர்களின் சிஷ்யகோடிகளான முரீதீன்கள் ஏராளமானோர் இந்தியா, இலங்கை, அந்தரோத் தீவு, மலேயா, பர்மா முதலிய பகுதிகளில் ஏராளமாக உள்ளனர். அல்ஹம்துலில்லாஹ்.

ஹஜ்ரத்தவர்களின் 'அல்ஹக்' என்ற இந்த மூல உர்து நூல் குர்ஆன் ஷரீபின் அகமிய ஹகீகத்துக்களைத் தெள;ளத் தெளிவாக பல உவமான உவமேயங்களுடன் எடுத்தியம்புகிறது. மிக மிகப் பிரயாசைப்பட்டு, அவர்களின் துஆ பரக்கத்தைக் கொண்டு யாருக்கும் தெளிவாக விளங்கும்வண்ணம் தமிழில் மூலக்கருத்து மாறாவிதமாக, தேவைப்பட்ட சிலவிடங்களில் விசேஷக் குறிப்புக்களுடன் எழுதி உங்கள் சமூகம் அளித்துள்ளோம். ஆழ்ந்த கருத்துடன் படிப்பீர்களாக! படித்து ஹக்கைத் தெரிவீர்களாக! ஹக்கை அறிவீர்களாக! ஹக்கை அனுபவிப்பீர்களாக! ஹக்கை அடைவீர்களாக! ஹக்! அல்ஹம்துலில்லாஹ்.

இந்நூலைப் படித்து விளக்கம் தெரியாதவர்கள் திரும்பவும் பலமுறை படிப்பீர்களாக! பின்பு தெரிய வரக்கூடும். அதற்கு மேலும் விளக்கம் தெரியாதிருப்பின், தயவு செய்து மெய்ஞ்ஞான அனுபோகமுள்ள உத்தமர்களையணுகி விளக்கம் பெற முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

فَاسْئَلُوْا اَهْلَ الذِّكْرِ اِنْ كُنْتُمْ لَا تَعْلَمُوْنَ.

**'ஃபஅஸ்அலூ அஹ்லத்திக்ரி இன்குன்தும் லா தஃலமூன்'**

'நீங்கள் அறியாதவர்களாயிருந்தால் இறை தியானச் சிந்தனையுடைய அறிஞர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வீர்களாக!' என்பது திருமறைப் போதனை.

கிருபையுள்ள றப்புல் ஆலமீன் நமக்கும் உங்களுக்கும், சகோதர முஸ்லிம் முஃமின்களுக்கும், சகோதரிகளுக்கும் மெஞ்ஞானப் பேரின்ப ஞானப்பேற்றையும், ஆன்ம விகாசத்தையும், சித்தி பெறும் பெரும் பாக்கியத்தையும் தந்தருள்வானாக! ஆமீன். இன்ஷhஅல்லாஹ், அண்மையில் ஹஜ்ரத்தவர்களின் ஏனைய நூல்களான அல்ஹக்(ஸுவால், ஜவாபு), அல்ஹகீகத்.... முதலியவற்றையும் தொடர்ந்து மொழிபெயர்த்து வெளியிட நாட்டம். துஆச் செய்வீர்களாக! வஸ்ஸலாம்.

காயல்பட்டணம். இவ்வண்ணம்,

27-7-1376 காதிமுல் கௌம்(சமூக ஊழியன்)

28-2-1957 **ஷெய்கு அப்துல் காதிர்.**

*பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.*

# அல்ஹக்கு

قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اِنَّ لِلْقُرْاٰنِ ظَهْرًا وَبَطْنًا وَحَدًّا وَمَطْلَعًا

'நிச்சயமாக குர்ஆனுக்கு வெளிரங்கமும் அந்தரங்கமும், மட்டும், திட்டமும் உண்டு.' என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளம் பற்றியுள்ளார்கள்.

அல்ஹக்கு என்ற திருநாமமுடைய இந்நூல் குர்ஆன் ஷரீபின் மெஞ்ஞான அகமிய விரிவுரையாகும். திருகுர்ஆனின் அகமியத்தையும் அனுபோக ஞானத்தையும் போதிப்பவர்களும், புர்கானின் அகமியங்களை உணர்ந்தவர்களும், ஞானவழி நடப்பவர்(சாலிகீன்) களுக்கு முன்னிலையானவர்களும், சித்தியடைந்தவர் (வாஸிலீன்) களுக்கு நடுநாயகமானவர்களும், உபதேசிகளுக்கு அரசருமான மௌலானா மௌலவி ஷhஹ் முஹம்மது அப்துல் காதிர் ஸூபிய்யில் ஹைதராபாதிய்யி (அவர்களின் சம்பூரண அனுக்கிரகம் எங்கும் ஓங்குக) அவர்கள் குர்ஆனின் பாடப் போதனையாகச் செய்த அபூர்வ வியாக்கியானக் கோவை இது.

**தஅவ்வுது**

اَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ.

**அவூது பில்லாஹி மினஷ்ஷைத்தானிர் ரஜீம்**

அப்புறப்படுத்தப்பட்ட iஷத்தானின் தீங்கை விட்டும் அல்லா(ஹ்)வைக் கொண்டு காவல் தேடுகிறேன்.

لَّا يَمَسُّهُ إِلَّا الْمُطَهَّرُونَ

**(லா யமஸ்ஸுஹு இல்லம் முதஹ்ஹரூன்)**

அல்-குர்ஆன் 56:79

'அதை (குர்ஆனை) பரிசுத்தமானவர்களேயல்லாது தொடலாகாது'.

குர்ஆன் மஜீது சம்பந்தமாக அதற்குரிய ஒழுக்கங்களை கவனிக்க வேண்டியது அவசியமாகும். மேலும், அதை ஓதுவதற்கு முன் வெளிரங்க,உள்ரங்கச் சுத்தத்தை உண்டுபண்ணிக் கொள்ளவும் வேண்டும்.

**சுத்தத்தின் கருத்து**

சுத்தம் தண்ணீரில் அல்ல. ஆண்டவனின் கட்டளையிலேயே இருக்கிறது. எனவே, யதார்த்தமான சுத்தம் அல்லாஹுதஆலாவின் அனுமதி என்பதாகவே உணர வேண்டும். மனிதன் எப்பொழுது சுத்தமாகி விடுகிறானோ அப்பொழுதான் குர்ஆன் மஜீதைத் தொட அவனுக்கு அனுமதியுண்டு. இவ்வாறே ஒவ்வொரு வஸ்துவையும் புழங்குவது அல்லாஹுதஆலாவின் அனுமதியில்லாவிடில் விலக்கப்பட்டதும் தடுக்கப்பட்டதுமாகும். ஏனென்றால் ஒவ்வொரு வஸ்துவும் குர்ஆனாகவும் புர்கானாகவும் இருக்கிறதென்பதால் என்க.

**குர்ஆன், புர்க்கான் என்பதன் விரிவுரை.**

குர்ஆன் என்று (ஜம்உ) தொகுப்பு நிலைக்கும், புர்க்கான் என்று (தப்ஸீல்) வகுப்பு நிலைக்கும் சொல்வார்கள். எப்படியெனில் வித்தானது தொகுப்பு நிலையாகும். அதற்குள் விருட்சத்தின் எல்லாப் பாகங்களும் அமைந்திருக்கின்றன. இந்நிலையில் விருட்சமானது வித்து (க்கு ஐன்) தானாக இருப்பது போல், அதன் ஒவ்வொரு பாகமும் மற்ற பாகங்களுக்கு (ஐன்) தானாகவே இருக்கும். இலை, பூ, காய், கிளை ஆகிய எல்லாம் இந்நிலையில் ஒன்று மற்றொன்று (க்கு ஐன்) தானாகவிருக்கும். எப்பொழுது இச்சக்திகள் எல்லாம் மரத்தின் கோலத்தின் வழியாக வெளியில் தோன்றுமோ அப்பொழுது ஒவ்வொரு பாகமும் தனித்தனியாக (வெள;வேறு) ஆகிறது. மேலும், வித்துடைய எல்லாத் தத்துவங்களும் வெளியாகி விடுகின்றன. இதனாலேயே இப்பொழுது இம்மரத்தின் நிலைக்கு புர்கான் என்று சொல்கிறார்கள்.

**ஸேப் -ஆப்பிள் பழத்தின் உவமை.**

பாஷையை உண்டு பண்ணியவர் ஒவ்வொரு பதத்தையும் ஒரு குறிப்பான பொருளுக்கே, கருத்திற்கே வைத்துள்ளார். இந்நிலையில் பதம் ஒரு கண்ணாடியைப் போன்றதாகிறது. அப்பதத்தில் அதை எப்பொருளுக்காக வைக்கப்பட்டுள்ளதோத அப்பொருளின் கோலம் தோன்றுகிறது. அப்பதம் எழுத்திலானாலும் சரி, மொழிதலிலானாலும் சரி அதற்கு எல்லா இடத்திலும் ஒரே தோற்றமாகவே இருக்கும்.

எப்பொழுது பதம் வாயிலிருந்து புறப்படுகிறதோ அல்லது கடிதம் முதலியவைகளில் எழுதப்படுகிறதோ அப்பொழுது அப்பதத்தின் கருத்து (அப்பதத்தை எப்பொருளுக்காக வைக்கப்பட்டுள்ளதோ அப்பொருள்) உங்கள் மனதில் பதிந்து விடுகிறது. எப்படியெனில் ஸேப் என்ற பதம் ஸீன்-யே-பே ஆகியவற்றால் சேர்க்கப்பட்டதாகும். ஆனால் இப்பெயர் வந்தவுடனேயே மனக்கண்ணாடியில் ஸேப்பின்- ஆப்பிள் பழத்தின் கோலம் வந்து விடுகிறது. இக்கோலம் ஆப்பிளின் இலட்சணங்களை கவனியாது வெறும் உருவம் மாத்திரம் மனதில் வருமேயானால் அக் கொலம் குர்ஆனாகும். ஆனால், அக்கோலம் ஆப்பிளின் இலட்சணங்களோடு வருமேயானால்-எவ்விதமெனில், கோலம், அளவு, நிறம், வாசம், உருசி முதலியவை போல். இந்நிலையில் ஆப்பிள் புர்கானாகும். ஏனென்றால், இக்கோலம் யாவும் யதார்த்தத்தில் ஆப்பிளின் கோலமடாகவேயிருந்தது. (இப்போது) தனித்தனியாக உண்டாகியிருக்கிறது.

**மனிதனின் உவமை**

மனிதனின் கோலம் மட்டும் நம் மனதில் வரும் பொழுது அது குர்ஆனாகும். மேலும் கண், மூக்கு, காத மற்ற அம்சங்களுடன் மனித கோலம் வருமேயானால் அது புர்கானாகும். ஆகவே இந்நிலையில் மனிதன் குர்ஆனாகவும் இருக்கிறான்: புர்கானாகவும் இருக்கிறான்.

**ஹக்கின் (தஜல்லீ) தோற்றம்**

ஆப்பிள் என்ற பதம் அல்லது மனிதன் என்ற பதம் நம் மனதில் வரும்போது அது அல்லாஹுத்தஆலாவின் (தஜல்லீ) வெளிப்பாட்டளவில் தேவையானதாக இருக்கிறது. அதாவது, எதுவரையில் அல்லாஹுத்தஆலா அந்தக் கோலத்தின் பேரில் நம்முடைய மனக்கண்ணாடியில் தோற்றமளிக்கவில்லையோ அதுவரையில் ஆப்பிள் அல்லது மனிதனுடைய கோலம் நம்முடைய மனதில் வரமுடியாத. ஏனென்றால், எந்த வஸ்துவும் மற்ற வஸ்து வெளியாவதற்குப் பரிபூரண காரணமாக இல்லையே என்பதனால், எனினும் மற்றக் காரணங்களோடு இதுவும் ஒரு காரணமாகவே இருக்கும்.

**நெருப்பின் உவமை**

வலுப்பமும் சிறப்பும் தங்கிய அல்லாஹுத்தஆலா ஆதியிலிருந்து ஒவ்வொரு கோலத்துடனம் ஒரு கட்டளையையும் குணப்பண்பையும் வைத்திருக்கிறான். உவமையில், நெருப்பின் கோலம் ஒரு குறிப்பான கோலமாகும். ஆனால், அதனுடைய கரித்தல், பிரகாசித்தல் முதலியன அதன் செயல்களும் குணப்பண்புகளுமாகும். நெருப்புடைய (தாத்து) சுய ரூபத்தின் கோலத்தில் ஏற்பட்ட (தஜல்லீயை) ஹக்கின் வெளிப்பாட்டைத் தொடரப்பட்ட தஜல்லீ (தஜல்லீ மத்பூஉ) என்று சொல்வார்கள். மேலும், இதுவே கரித்தல், பிரகாசித்தல் என்ற கோலங்கள் வெளியாவதற்குக் காரணமுமாகும். அல்லாஹுத்தஆலாதனது பரிசுத்த தாத்தின்பேரில் உடமையாக்கிக் கொண்டான்-அதாவது-அவன் எந்தகக் கோலத்திலாவது (தஜல்லீ) வெளிப்படுவானேயானால் அந்தக் கோலத்தின் கட்டளை, குணப்பாடுகளுடன் உடந்தையாகவே வெளிப்படுவான். இந்தக் கட்டளை, குணப்பாடுகளின் தோற்றத்திற்குத் தொடர்ந்த தோற்றம்(தஜல்லி தாபிஆ) என்று சொல்வார்கள். எப்படியென்றால், நெருப்பு, பஞ்சு இவையிரண்டும் ஒன்றாகச் சேரக் கூடிய கோலங்களாகிய இக்கோலங்கள் வெளியில் உண்டானதும் பரிசுத்த அல்லாதஹுத்தஆலா பஞ்சு கரிகிற கோலத்தில் உடனே தாமதமின்றி எப்பொழுதும் தோற்றமளிக்கிறான். தோற்றமளித்துக் கொண்டிருப்பான்.

**தற்கால தத்துவ ஞானிகளும் பரிபூரண காரணமும்**

தற்காலத் தத்துவ ஞானிகளுக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் நெருப்பு, பஞ்சு இவையிரண்டும் ஒன்று சேருவதைப் பரிபூரண காரணம் என்று உணருகிறார்கள். அவற்றின் திரைக்குள்ளாலே எந்தத் தத்துவக் கரம் வேலை செய்கிறதோ அதன்மீது அவர்களுடைய பார்வை விழுவதில்லை. யதார்த்தம் இதுவாக இருக்கும். அதாவது நெருப்பு, பஞ்சு இவ்விரண்டும் சேரக்கூடிய கோலத்திற்கப்பால் (கரித்தல் என்ற கோலத்தில்)

அல்லாஹுத்தஆலாவுடைய (தஜ்ஜலீ) தோற்றம் உண்டாகவில்லையானால் நெருப்பு கரிக்கவும் இயலாது. பஞ்சு கரியவும் முடியாது. இப்பொழுது கரிவதற்கு நெருப்பின் வுஜூது (இருப்பு) ம் பஞ்சுடைய வுஜூதும், அவ்விரண்டின் சேருதலுடைய வுஜூதும் பஞ்சுகரிதலுக்கு (அஸ்பாபு) காரணங்களாகவே ஆகும். (இல்லத்தே தாம்மா-பரிபூரண காரணமல்ல)

وَلَنْ تَجِدَ لِسُنَّةِ اللّٰهِ تَبْدِيلًا

**வலன் தஜிதலி ஸுன்னதில்லாஹி தப்தீலா**

(அல்-குர்ஆன் 33:62)

'அல்லாஹுத் தஆலாவுடைய வழக்கத்திற்கு மாற்றம் காணமாட்டீர்கள்' என்ற திருமறை வசனத்திற்கு இதுவே கருத்தாகும்.

**மிகைப்பான விவேகமும் அற்புதங்களும்.**

நெருப்பும் பங்சும் ஒன்றுசேரும் பட்சத்தில் கண்டிப்பாய்ப் பஞ்சு கரிந்தே தீரும் என்பது நன்கு தெரிந்த விஷயம். ஆனால், எப்பொழுதாகிலும் பரிபூரண விவேகியான அல்லாஹு ஜல்லஷஃனுஹுவதஆலாவுக்கு விருப்பப்படுமேயானால், அவன் தனது மிகைப்பான விNஷச தத்துவத்தை வெளிப்படுத்துகிறான். நெருப்பின் வுஜூதும், பஞ்சின் வுஜூதும் அவ்விரண்டின் சேருதலுடைய உஜூதும் ஆகிய இவையாவும் உண்டாயிருந்த போதிலும் கூட (கரித்தலின் கோலத்தில் அவன் தஜல்லியாகவிடில்) பஞ்சு கரிவதில்லை. எது போலெனில், நமரூது நெருப்பு கரிக்கக் கூடியதாகவிருந்தது. ஹஜ்ரத் இபுறாகிம் கலீலுல்லாஹி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அதன் குணபாட்டை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஸ்தானமாகவும் இருந்தார்கள். ஆனால், அடக்கியாளும்படியான அல்லாஹுத்தஆலாவுடைய கைவசத்தில் மறைந்திருந்த சக்தி அவர்களை நெருப்பின் குணத்தை ஏற்றுக் கொள்வதை விட்டும் தடுத்துவிட்டது. இங்குதான் முஃஜிஸாத்து, கறாமத்து முதலிய அற்புதங்களின் நிலைப்பாடு உண்டாகிறது.

**இயற்கைக்கு மாற்றமான கட்டளைகளும் குணபாடுகளும்**

பொதுவாக ஐரோப்பிய தத்துவ ஞானிகளுடைய ஆராய்ச்சியின் தவறுதல்களை நிரூபிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மேலும், அவர்களுக்குப் பரிசுத்த குர்ஆன் ஷரீபுடைய உண்மைப் போதனைகளை உணர்த்தி வைக்க வேண்டியதும் அவசியமாகிறது. அவர்கள் மற்றக் காரியங்களில் முன்னேற்றமடைந்த போதிலும் (இதில்) பிற்போக்கிலேயே இருக்கிறார்கள். அவர்கள் அந்த இடத்திலேயே தடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய புத்தி அதற்கப்பால் செல்வதற்கு இயலாமலாகிவிட்டது. அது அவர்களுடைய மனிதத் தன்மைக்கு முற்றிலும் கெடுதியாகும். எவர்கள் இயற்கைக்கும் இயற்கையின் கட்டளை குணபாடுகளுக்கு மாற்றத்தை (மாற்றமாக நடக்குமென்பதை) ஒப்புக்கொள்கிறார்களில்லையோ, அவர்கள் தவறான வழியிலேNயு இருக்கிறார்கள் என்பதை அவர்களுக்க நிரூபித்துக் காண்பிக்க வேண்டியதும்

அவசியமாகிறது. இயற்கையின் திரைக்குள் வலிமை பொருந்திய மற்றொரு கை ஒவ்வொரு கனமும் வேலை செய்து கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் உணருகிறார்களில்லை.

**(இஸ்திஆதத்து) கார்மானம் தேடல்**

இவ்வியாக்கியானத்திற்குப் பின்னால் காவல் தேடுவதின் அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதன் பக்கம் உங்களை முகநோக்கச் செய்ய நாடுகிறேன்.

فَإِذَا قَرَأْتَ الْقُرْآنَ فَاسْتَعِذْ بِاللَّهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ

**பஇதா கர:்த்தல் குர்ஆன பஸ்தஇத் பில்லாஹி மினஷ்ஷைத்தானிர் ரஜீம்**

(அல்-குர்ஆன் 16:98)

'குர்ஆனை ஓதுவீர்களானால் அப்புறப்படுத்தப்பட்ட ¡ஷத்தானை விட்டும் அல்லாஹ்வைக் கொண்டு காவல் தேடுங்கள்'என்று குர்ஆன் மஜீதில் உள்ளது.

இஸ்திஆத்து என்பதன் பொருள் காவல் தேடுவது என்பதாகும். எவனுக்குக் கார்மானத்தின் தேவையும் அவசியமும் இருக்கிறதோ அவனுக்கே கார்மானத்தின் தேட்டம் உண்டாகும். கார்மானம் அளிப்பதற்கு எவனில் யோக்கியாம்சம் இருக்கிறதோ அவனிடத்திலேயே கார்மானம் தேடப்படும். இங்கு எவன் கார்மானம் தேடுகிறானோ யதார்த்தத்தில் அவனுக்கு கார்மானத்தின் அவசியமுமிருக்கிறது. யாரிடத்தில் கார்மானம் தேடப்படுகிறதோ அவனே (அந்தப் பரிசுத்த நாயனே) யதார்த்தத்தில் கார்மானம் தேடப்படுவதற்கு லாயக்கானவனாகவுமிருக்கிறான்.

**அஊது**

**'காவல் தேடுகிறேன்'**

அஊது என்பது أ அலிப் ع ஐன் و வாவ் ذ தால் அகியவற்றைக் கொண்டு சேர்க்கப்பட்டிருக்கிறது. அலிபினால் (இஸ்திகாமத் கிப்ரியா) பெருமையும், மகிமையும் ஐனினால் (உபூதியத்து) அடிமைத்தனமும், வாவினால் (நாஸூத்து) ஸ்தூல சரீரத்து'டைய பதவிக்கு(இதற்கு ஆறாவது இறக்கம் என்றும் சொல்வார்கள்.) அவசியமான (கதாபத்து) பூரணத்தடிப்பத்தையும் தாலினால் (தில்லத்து) தாழ்மைத் தனத்தையும் உணருவது அவசியம். மேலும் அஊது என்ற பதம் சொல்லப்படும்போது ஒவ்வொரு அட்சரத்தினுடைய நேர்பாட்டிலுள்ள பொருளும் ஓதுகிறவனுடைய மனதில் உண்டாக வேண்டியது அவசியம். அலிபுக்கு நேர்பாடாகிய தனது பெருமைதனத்தை ஐனுக்கு நேர்பாடான அடிமைத்தனத்தில் சாய்க்க வேண்டும். வாவில் தன்னை நிரம்பத் தடிப்பமானவனென்றும் தாலில் மிகவும் தாழ்மையானவனென்றும் ஆக்க வேண்டும்.

**(ஸுவால்) கோரிக்கையின் மூவகைகள்**

கோரிக்கையில் மூன்று வகைகளுள்ளன:

**காலீ** -சொல்லால்

**(ஹாலீ)** -நிலையால்

**இஸ்த்தி்ஃதாதீ** -அமைப்பால்.

காலீ என்பது நாவால் செய்யும் கோரி;க்கை. எப்படியென்றால் எஜமானே! எனக்கு கார்மானத்தின் தேவை இருக்கிறது என்று நாவால் சொல்வது.

ஹாலீ என்பது நிலையைக் கொண்டு கேட்பதாகும். அதாவது கார்மானம் தேடக்கூடிய நிலையை உண்டாக்கிக் கொள்வதாகும்.

இஸ்தி்ஃதாதீ என்பது (தேடப்பட்ட) வஸ்து உண்டாவதற்கு அருகதை உண்டாவதாகும். எப்படியெனில், குழந்தை பிறப்பதற்கு முன்னாலேயே அதனுடைய ஆகாரத்தின் அருகதையின் கோரிக்கையை முற்படுத்தியதும், சர்வத்தையும் படைத்து இரட்சிக்கக் கூடிய அல்லாஹு ஸுப்ஹான ஹுவதஆலா அச்சிசு பிறப்பதற்கு முற்கூட்டியே அதன் உணவை தாயின் மார்பிலே அமைத்து விட்டான். ஏனென்றால் (சிசு) எதுவரை வயிற்றுக்குள்ளிருந்ததோ அதுவரை அதற்கு நாவுமில்லை நிலைமையுமில்லை என்பதனாலேயே.

நிலைமையின் கோரிக்கையானது சொல்லாலான கோரிக்கையை விடச் சீக்கிரம் நாட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க சக்தியுள்ளது. மேலும் (இஸ்தி்ஃதாதீ) அருகதையின் கோரிக்கையானது இவ்விரண்டையும் விட அதி சீக்கிரம் குணபாடுடையது. இதனாலேயே அஊது என்ற பதத்தை உங்கள் நாவிலிருந்து வெளிப்படுத்தும் போது பரிபூரணமான தாழ்மைத்தனத்தையும், திக்கற்றத் தன்மையையும், தேவையையும் உண்டு பண்ணிக் கொள்ளுங்கள். உங்களை இறந்தவர்களாகவும், அறிவிலிகளாகவும், இயலாதவர்களாகவும், நாட்டமில்லாதவர்களாகவும், செவிடர்களாகவும், குருடர்களாகவும், ஊமையர்களாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இந்நிலையில் நீஞ்கள் (ஹாலீ) நிலைமையின் கோரிக்கையினுடைய முன்றானையைப் பிடித்துக் கொண்டீர்கள். இப்பொழுது (தேட்டப் பொருள் வெளியாவதற்கு உங்களில் இஸ்தி்ஃதாது-அருகதை-உண்டாகிக் கொண்டே வந்து முதிர்ந்த போது) உங்களுடைய கட்டுப்பாடான ஜீவன் எல்லையற்ற ஜீவனுக்கும், உங்களுடைய இயலாமை எல்லையற்ற சக்திக்கும் , உங்களுடைய மடமை மட்டற்ற அறிவுக்கும் , உங்களுடைய நாட்டமின்மை எல்லையற்ற நாட்டத்திற்கும் உங்களுடைய செவிட்டுத் தன்மை எல்லையற்ற கேள்விக்கும், உங்களுடைய குருட்டுத் தன்மை எல்லையற்ற பார்வைக்கும், உங்களுடைய ஊமைத்தன்மை எல்லையற்ற பேச்சுக்கும் உற்பத்தி ஸ்தானமாகி விடும். மேலும், இப்பொழுது நீங்கள் ஹதீது குத்ஸியில்,

بِيْ يَسْمَعُ بِيْ يَبْصُرُ بِيْ يَنْطِقُ بِيْ يَبْطِشُ بِيْ يَسْعِيْ

'என்னைக் கொண்டே கேட்பான்-என்னைக் கொண்டே பார்ப்பான்- என்னைக் கொண்டே மொழிவான்- என்னைக் கொண்டே பிடிப்பான்- என்னைக் கொண்டே நடப்பான்' என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய நாவில் வந்த நன்மாராயத்தின் அந்தப் பதவியைப் பெற்றுக் கொண்டவர்களாவீர்கள். மேலும் எப்பொழுது மூன்று கோரிக்கைகளும் ஒன்று சேர்ந்து விடுமோ அப்பொழுது நாட்டம் பூர்த்தி அடைவது அவசியமாகி விடுகிறது. எப்படியென்றால் நாவினால் அஊது என்று சொல்வது சொல்லின் கோரிக்கையாகும். மேற்சொல்லப்பட்ட தன்மையாவது (அதாவது, உங்களை இறந்தவர்களாக- அறிவிலிகளாக- இயலாதவர்களாக- நாட்டமில்லாதவர்களாக- செவிடர்களாக-குருடர்களாக- ஊமையர்களாக ஆக்கிக் கொள்வது) நிலைமையின் கோரிக்கையாகும். அத்தன்மையில் நாட்டமுண்டாவதின் தேட்டமே (அதில் நிலைத்திருப்பதுவே) அருகதையின் கோரிக்கையாகும்.

**காவல் தேடுவதின் பிரயோசனம்**

பலவீனம் சக்திக்கும், தாழ்மை சிறப்புக்கும், ஏழ்மை சீமான் தனத்திற்கும், வியாதி சௌக்கியத்திற்கும் கண்ணாடியாயிருக்கும். எதுபோலெனில், எஜமான் அடிமையைப் பார்ப்பது கொண்டு தன்னை எஜமான் என்று உணருகிறான். இப்பொழுது அடிமை எஜமானுக்குக் கண்ணாடியாகிறான். ஏனெனில் எஜமானில்லையானால் அடிமையுமில்லை. அடிமையில்லையானால் எஜமானுமில்லை. ஆகவே ஒருவர் மற்றொருவருக்குக் கண்ணாடி போலாகிறார்கள். அடிமையைப் பார்த்ததும் எஜமான் ஞாபகத்தில் வருகிறான் என்பது ஒப்புக் கொள்ளப்படும்போது இதிலிருந்து,

مَنْ رَآنِيْ فَقَدْ رَآيِ الْحَقَّ

**(மன் ரஆனி பகத் ர அல்ஹக்க)**

'என்னைக் கண்டவன் ஹக்கைக் கண்டான்'

என்ற (ஹதீதின்) கருத்தை விளங்கிக் கொள்வீர்கள். மேலும் உங்களை தாழ்மைப்பட்டவர்கள், கதியற்றவர்கள் என்று அறிந்த பிறகு - அதாவது உங்களுடைய யதார்த்த நிலையை அறிந்த பிறகு - அதற்கு எதுகையான கண்ணாடிகளில் உங்களுடைய நாயகனை உணர்ந்து கொள்வீர்கள். இங்கிருந்து,

مَنْ عَرَفَ نَفْسَهُ فَقَدْ عَرَفَ رَبَّهُ

**(மன் அரப நப்ஸுபகத் அரப ரப்பஹு)**

'தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிவான்'

என்ற ஹதீதின் கருத்தும் விளக்கத்தில் வரக்கூடும்.

காவல் தேடுவது கொண்டு உங்களுக்குள் பூரணமான தாழ்மைத்தனத்தை உணருங்கள். அப்பொழுது,

مَنْ تَوَاضَعَ لِلّٰهِ فَقَدْ يَرْفَعُهُ اللّٰهُ

**(மன் தவாலஅ லில்லாஹி பகத் யர்பஉ ஹுல்லாஹு)**

'எவன் அல்லாஹுத் தஆலாவுக்குத் தாழ்மைப்படுவானோ அவனை அல்லாஹ் உயர்த்துகிறான்'.

என்ற பதவி உண்டாக்கக் கூடிய அந்த ஸ்தானத்தை கொண்டு பாக்கியம் பெறுவீர்கள். மேலும், அடிமை திக்கற்று போய் எஜமானுடைய முன்னிலையில் விழுவானேயானால் அவனுக்கு ஒரு வகையான வழியும் கதியும் இல்லாது அற்றுப் போகுமேயானால் அப்போது எஜமான் தானே தனது கைகளை நீட்டி அவனை எடுத்துக் கொள்வான் என்ற விஷயத்தில் ஒரு வகையான மறுப்புக்கும் இடமில்லை. வியாதியஸ்தனுக்கு சௌக்கியம் கொடுக்கப்படும். கேட்பவனுக்கு (அவனுது தேட்டம்) கொடுக்கப்படும். எப்பொழுது மனிதன் (கீழே) விழுகிறானோ அப்பொழுது மற்றவன் அவனை தூக்கி எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது. எவ்விதத்திலும் நமது சக்தி, ஆட்டம், அசைவு அத்தனையையும் விட்டுவிட வேண்டியது அவசியமாகும். இல்லாவிட்டால்,

لَاحَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ الْعَلِيِّ الْعَظِيْمِ

**(லாஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹில் அலிய்யில் அழீம்)**

'வலுப்பமும் உயர்வுமுடைய அல்லாஹ்வின் உதவி கொண்டல்லாது ஆட்டமும் அசைவும் சக்தியுமில்லை' என்பதற்கு ஒரு அர்த்தமும் இல்லாமலாகிவிடும்.

**ஒவ்வொரு கோலத்திற்கும் ஒவ்வொரு கட்டளையும் குணமும்.**

எப்பொழுது பூரண நிராதரவு வெளியாகி மனிதன் எல்லா வகையிலும் ஆதரவிழந்து போகிறானோ அப்பொழுது தன்னையறியாமலேயே ஆண்டவனைக் கூப்பிடுகிறான். இதனாலேயே அஊதுக்கு அடத்தபடியாக பில்லாஹி என்று சொல்வது மிகவும் பொருத்தமாகும். ஆனால் பில்லாஹி என்று சொல்வதும், அல்லாஹுத் தஆலாவிடத்தில் உதவி தேடுவதும் எல்லா ஆதரவுகளும் அற்றுப் போன சமயத்திலேயே சரியானதும் ஆமானதுமாகும். பூரண விலாயத்தும் இதுவேயாகும். அதாவது அல்லாஹுத்தஆலா உடைய வாசலைத் தவிர்த்து வேறு எத்தனை வாசல்களுண்டோ அவையனைத்தும் ஒவ்வொன்றாக

அடைக்கப்பட வேண்டும். உங்களுடைய ஒரே குறிக்கோளில் முழு உலகமும் ஒன்று சேர வேண்டும். (அதாவது அல்லாஹ் அல்லாதவைகளை விட்டும் முகந்திருப்ப வேண்டுமென்ற உங்கள் குறிக்கோளில் உலகிலுள்ள எப்பொருளும் பாகுபாடின்றி சமமாக வேண்டும். அவை எவையானாலும் அவற்றை விட்டும் முகந்திருப்ப வேண்டும்.) மேலும்,

حُبُّكَ الشَّيْءَ يُعْمِي وَيُصِمُّ

**(ஹுப்புகஷ் ஷையு்ஃமீ வயுஸிம்மு)**

'ஒரு வஸ்துவை நீ நேசிப்பது (இதர வஸ்துவை விட்டும்) உன்னைக் குருடாகவும் செவிடாகவும் ஆக்கிவிடும்' என்பதன் உதாரணம் உண்மையாக வேண்டும். நீங்கள் (முஹப்பத் நேசத்தில் பூரணமாகி தலையிலிருந்து கால்வரையிலும் கண்ணைப் போன்று மற்றவர்கள் தொடுவதற்கில்லாமல் ஆகிவிடவேண்டும்.

மேலும் அஊது சொன்னதும், அல்லாஹ்வைத் தவிர மற்றெல்லாப் பொருளும் அற்பமாகத் தென்பட வேண்டும். எவற்றின் பேரில் உங்கள் பார்வை விழுகிறதோ அவையெல்லாம் பிறரளவில் தேவைப்பட்டவை (முஹ்த்தாஜ்) என்றும், கதியற்றவை என்றும் ஒரு பொருளுமல்ல என்றும் அறியப்பட வேண்டும்.

فراق یار اگر اندک است اندک نیست
درون دیده اگر نیم موست بسیار است

**(பிராகயார் அகர் அந்தக் அஸ்த் அந்தக் நேஸ்த் தரூன் தீதா அகர் நீமுமூஸ்த் பிஸ்யார அஸ்த்)**

'நேசனை விட்டுப் பரிவது கொஞ்ச நேரமானாலும் சரி அதன் கவலை கொஞ்ச நஞ்சமல்ல. கண்ணுக்குள்ளே ஒரு சிறு ரோமத்துண்டு விழுந்தாலும் அதன் வருத்தம் அதிகமே'.

இதற்காகவும் அல்லா(ஹ்)விடத்தில் உதவி தேடவேண்டும். அதாவது அல்லாஹ் ஒருவனைத் தனது சொந்த அடியானாக ஆக்க நாடுவானேயானால் அவனை வழிகளை விட்டும் ஆதரவற்றவனாக ஆக்கி விடுகிறான். மேலும், அவனுக்குத் தன்னுடைய வாசலைத் தவிர்த்து மற்ற வாசல்களனைத்தையும் அடைத்துவிடுகிறான். இதனாலேயே ஸஜ்தாவில் தலையை(கீழே) வைப்பதனால் ஒன்றுமில்லை என்கிலும் தலைக்குள்ளிலிருகு;கிறதை (அகந்தையை) கீழே வைக்க வேண்டியது அவசியமாகும். மேலும் தொழுகையிலிருந்து



www.sufimanzil.org

வெளிப்பட்டபின் தொழுதவனிலிருந்து தெய்வீக நறுமணம் வீச வேண்டும். ஏனென்றால், கஸ்தூரிப்பையினால் எது எது தொடப்படுமோ அது அதில் நிச்சயமாகக் கஸ்தூரியின் நறுமணம் தங்கியே இருக்கும்.

புதியது (சிருஷ்டி) பூர்வீகத்துடன் (சிருஷ்டிகர்த்தாவுடன்) சேராது. பூர்வீகத்தின் எதிரில் புதியது வருமாயின் நிலைக்காது. சூரியன் முன் இருளை யாரும் பார்த்ததுண்டோ? இதனால் பில்லாஹியுடைய (இஸ்ஸாக்) சேர்த்து வைக்கக் கூடிய 'பே'யின் குணபாடும் உண்டாவது அவசியமாகும். மேலம் 'நான்' என்பது ஒன்று தவிர்த்து மற்றெல்லாமே இல்லாது போவது அவசியமாகும். ஏனென்றால் எந்நிலையிலும் நானென்பது தரிபடுவது அவசியமாகவேயிருக்கிறது. மேலும், மனிதன் ஒரு கற்பனையான நானென்பதைத் தவிர்த்து வேறொன்றுமில்லை.

ای برادر تو همی اندیشه مابقی تو استخوان و ریشه

**(ஐ பிராதர் தூ ஹமே அந்தேஷயீ**

**மாபகீ தூ அஸ்துகானோ ரீஷயீ)**

'சகோதரா! நீ எப்பொழுதும் ஊகிக்கப்பட்டவனாகவே இருக்கிறாய். எலும்பையும் தோலையும் தவிர வேறொன்றுமில்லை.'

மேலும் இக்கற்பனையான நானென்பதன் பேரிலேயே எல்லாச் செய்கைகள், வணக்கங்கள், கொடுக்கல், வாங்கல்கள், நன்மை, தீமைகள், சுகதுக்கங்கள் ஆகியவற்றினுடைய சக்கரத்தின் சுற்றுமிருக்கிறது. (அதாவது மனிதன் தன்னைத்தான் என்று உணரக்கூடிய அந்தக் கற்பனை நான் என்பதைத் தவிர்த்து அத்தோடு சேர்க்கப்படக்கூடிய அதன் குணப்பண்பாடுகளான இலட்சணங்கள் செய்கைகள் அனைத்தும் இல்லாது போக வேண்டும். ஆனால், அந்தக் கற்பனையான நான் மட்டும் போகாது. ஏனெனில் அதன் பேரிலேதான் ஏவல் விலக்கல், கொடுக்கல் வாங்கல், நன்மை தீமை, சுக துக்கம் யாவும் சுழலுகின்றன.)

**அல்லாஹ் என்று யாருக்குச் சொல்கிறார்கள்?**

அல்லாஹ் என்பது தெய்வீகத்தன்மையின் (உலூஹிய்யத்து) மர்தபாவுக்குப் பெயர். உலூஹிய்யத்து என்பது ஏழு (ஸிபத்து) இலட்சணங்களோடும் கூடிய பரிசுத்த தாத்துக்குப் பெயர். அதாவது ஹக்குத் தஆலாவின் தாத்து ஏழு இலட்சணங்களைக் கொண்டு இலட்சணம் பெற்றதாகக் கவனிக்கப்படும் பொழுது உண்டான இக்கோலத்திற்கு மர்தபத்துல் உலூஹிய்யா என்று பெயர்.

**ஏழு இலட்சணங்களும் இவைகளாகும்.**

ஹயாத்து (ஜீவன்), இல்மு (அறிவு), இராதத்து (நாட்டம்), குத்ரத்து (தத்துவம்), ஸம்உ (கேள்வி), பஸர்(பார்வை), கலாம்(பேச்சு) இவ்வேழு இலட்சணங்களும் சேர்ந்த கோலத்திற்குத்தான் மர்த்தபத்துல் உலூஹிய்யாவென்று பெயர். இவைகளல்லாமல் ஹக்குத்தஆலாவிலிருந்து உலகத்தில் எந்த வஸ்துவுக்கும் அதனுடைய தேவையை நிறைவேற்றி வைக்க முடியாது. எப்பொழுது (உலூஹிய்யத்து) தெய்வீகத் தன்மையின் கோலம் (உபூதிய்யத்து) பூரண அடிமைத் தன்மை எனும் கண்ணாடியில் பதியுமோ அப்பொழுது பில்லாஹி என்பதன் பொருள் உண்டாகிறது. பில்லாஹியின் இல்ஸாக்குடைய 'பே'யினால் உலூஹிய்யத்துடைய மர்தபாவில் சேர்ந்து விட்டீர்கள். ஏனென்றால், அடிமைத்தனத்தின் பூரணப்பதவி தெய்வீகத் தன்மையின் கண்ணாடியாக இருப்பதனால். ஆகவே தெய்வீகத் தன்மை உங்களுடைய பூரண அடிமைத்தனம் என்னும் இக்கண்ணாடியில் பதிந்து போய்விட்டது. ஏனெனில், கண்ணாடியில் எந்த வஸ்து பதிகிறதோ அதுவே தோற்றமளிக்கும் என்பது பகிரங்கமான விஷயம். எப்பொழுது உங்களுடைய அடிமைத்தனம் என்னும் கண்ணாடியில் தெய்வீகத் தன்மையுடைய கோலம் பதிந்து விடுகிறதோ அப்பொழுது அதுவே தோன்றும். அதுவே பார்க்கப்படும். மேலும் அதனுடைய குணபாடே அதனுடைய கட்டளையே ஆகும். பின்பு உங்களை ஷைத்தான் எப்படித் தொடமுடியும்?

**ஷைத்தான்**

ஷைத்தான் என்பது ப∴லான் என்ற எடுப்பின் பேரில் கடப்பான பொருளுக்கு வைக்கப்பட்டதாகும். எதுபோலெனில், றஹ்மான் என்று மாபெருங் கிருபையுடையவனுக்குச் சொல்கிறார்கள். இதே மாதிரி ஷைத்தான் என்பது ஹக்குத் தஆலாவின் சமூகத்தை விட்டும் மிகவும் தூரமானவனுக்குப் பெயர். ஆகவே, கருத்தாவது (ஹக்குத் தஆலாவின் சமூகத்தை விட்;டும்) தூரமானவனையும், தூரமாக்குபவனையும் ஷைத்தான் என்று உணர வேண்டியது அவசியம். இந்த ஷைத்தானிய்யத்தாகிறது(சமூகத்தை விட்டும் தூரப்படத்துதல்) எது வரையிலும் மனிதன் ஹக்குத்தஅலாவின் சமூகத்தில் சேர்ந்தவனாக ஆகவில்லையோ அதுவரையிலுந்தான். எப்படியானாலும் மொழிதலால் வரக்கூடிய (இஸ்திஆதத்து) கார்மானமாகிறது வெறும் மொழிதலாலான கார்மானமே. மேலும் குர்ஆனை ஓதுவதற்கு முன்னால் மேற்கூறப்பட்ட இந்த அந்தரங்கக் கார்மானத்தைப் பற்றியேதான் (அல்லாஹுத் தஅலாவின் ஏவல்) கட்டளை வந்திருக்கிறது. ஏனென்றால் அல்லாஹுத்தஆலாவினுடைய கலாமாகிய குர்ஆன் ஷரீபானது அதை அல்லாஹுத்தஆலாவினுடைய நாவினாலேயே ஓதப்படுவதற்காக. மேலும் இதற்காக வேண்டியே குர்ஆனை ஓதுவீர்களானால் சமூகத்திலிருந்து துரத்தப்பட்ட ஷைத்தானைவிட்டும் அல்லாஹ்வைக் கொண்டு கார்மானம் தேடுங்கள் என்று திருவுளம் பற்றி இருக்கிறான்.

بسم الله الرّحمٰن الرّحيم.

(பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்)

'அளவில்லா அருளாளனும், நிகரில்லா அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்'

## பிஸ்மி சொல்லுதல் (தஸ்மியா)

ஒரு வேலை வெற்றிகரமாக முடிய மனிதன் நாடும்போது அதற்குச் சில இடையூறுகளும் ஏற்படுவதுண்டு. மேலும் அதுவெற்றிபெற உதவியான அனுசரணையான சில காரியங்களும் உண்டு. உதாரணமாக நீங்கள் ஒரு காட்டின் வழியே செல்ல ஏற்படும் பட்சத்தில் துஷ;ட மிருகங்களுக்கு எதிர்படவும் நேரும். ஆகையால், துஷ;ட மிருகங்கள் உங்களின் நோக்கத்துக்கு இடையூறாகாதிருக்கும் பொருட்டு ஆயுதங்களை அணிந்தவர்களாக இருக்க வேண்டும். இதே மாதிரி எந் நோக்கத்திற்காக உங்களுடைய இந்தப் பிரயாணமிருக்கிறதோ அதற்கு உதவியளிக்கக் கூடியதாகவும் சில வஸ்துக்களிருக்கலாம். அவை குதிரை, மோட்டர் அல்லது உதவியளிகக்கக் கூடிய இவை போன்றவைகளாம். எப்பொழுது இவ்விரண்டு காரியங்களும் சித்தியாகிவிடுமோ அப்பொழுது நிச்சயமாகக் குறிப்பிட்;ட இடத்திற்கு எளிதாய்ப் போய்ச் சேர முடியும்.

அஊது பில்லாஹி மினஷ; ¡ஷத்தானிர் ரஜீம் என்பது இடையூறுகள் நீங்கிப் போவதற்காக வேண்டியே அவசியமாக இருக்கிறது. எப்பொழுது இது உண்டாகி விடுமோ அப்பொழுதுதான் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் உடைய தேவை ஏற்படுகிறது. அதாவது ஆண்டவனே! குர்ஆன் மஜீதை ஓதுவதற்கு எனக்கு என்னென்ன காரியங்கள் அவசியமோ அதில் எனக்கு உதவி புரிவாயாக! என்பதாகும்.

## பிஸ்மில்லாஹி உடைய பே

பிஸ்மில்லாஹிலுள்ள பே (இஸ்திஅனத்து) உதவிக்காக உள்ளது பே என்னும் ஜர்ருடைய அட்சரம், தான் கொளுகியதை தேடுகிறது. ஆனால் விரிவுரையாசிரியர்கள் இது கொளுகிய கருத்து யாது ன்பதில் பலதரப்பட்ட அபிப்பிராயமுடையவர்களாயிருக்கிறார்கள். உண்மையில் அதை ஒரு குறிப்பான செயலைக் கொண்டு கொளுகியதாக ஆக்காமலிருப்பது அவசியமாகும். அப்படியாயின் பிஸ்மில்லாஹி என்பது அந்த வேலைக்கே சொந்தப்பட்டதாக ஆகிவிடும். எனினும் அது பொதுவாகவே புழங்கப்படுகிறது. இவ்வாறாகவே ரஸூலுலல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் திருவுளமாயிருக்கிறார்கள். ந்த வேலைக்கும் முன்னால் பிஸ்மில்லாஹ்வை ஓதுவது அந்த வேலை நன்மையாய் முடிவதற்குப் பூரண காரணமாகும். இந்த ஹதீதினால் ஒவ்வொரு வேலைக்கும் நேர்பாடான செய்கையைக் குறிப்பிடுவது அவசியம் எனத் தெளிவாக விளங்குகிறது.

மனிதன் உளவருந்தும்போது, அதுசமயம் பிஸ்மில்லாஹ்வுடைய (ஜர்ருடைய அட்சரமாகிய) 'பே' உடைய கொளுகிய செயல் ஆக்குலு 'புசிக்கிறேன்' என்பதாகும். தண்ணீர் குடிக்கும்போது அஷ;ரபு 'குடிக்கிறேன்' என்பதும், தூங்கும்போது அனாமு 'தூங்குகிறேன்' என்பதுமாகும். இதேமாதிரி ஒவ்வொரு வேலைகளின் தொடர்ச்சியும் உண்டாயிருக்கிறது.(இங்கு) ஓதுவது சம்பந்தமாக இருப்பதனால் அக்ரஉ 'ஓதுகிறேன்' என்பதே அதன் தொடர்ச்சி) என்று உணருவது அவசியமாகும்.

**தெய்வீகத் தோற்றமும் உதவி தேடலின் விளக்கமும்.**

உதவி தேடுவது எந்த வேலையைக் கொண்டானாலும் எந்த வஸ்துவைக் கொண்டானாலும், மனிதனைக் கொண்டானாலும் யதார்த்தத்தில் அது அல்லாஹ்வைக் கொண்டே உதவி தேடினதாகவே ஆகும். உதவி தேடலின் கருத்து இதுவாக வைக்கப்படவில்லையானால் ஒவ்வொரு கணமும் ஷpர்க்குடைய படுகுழியில் விழ வேண்டியது வரும். உதாரணமாக வியாதியஸ்தன் மருந்தைக் கொண்டே அல்லது வைத்தியனைக் கொண்டோ உதவி தேடும்போது அந்த மருந்து அல்லது வைத்தியன் தானே சுகமளிக்கக் கூடியவன் என்று உணருவது ஷpர்க்காகும். ஏனென்றால், சௌக்கியத்தை மருந்து அல்லது வைத்தியன் கை வழியாக அல்லாஹுத்தஆலாவே தோற்றுவித்தான். எதுவரையிலும் சௌக்கியத்தின் கோலத்தில் அவன் தோற்றமளிக்கவில்லையோ அதுவரையில் ஒன்றுமே நிகழ முடியாது.

**தெய்வீகத் தொடர்பு**

மருந்தை சாப்பிட்டதும் வைத்தியன் பக்கம் போவதும் சௌக்கியம் தோன்றுவதற்குக் காரணமாகும். மருந்து இல்லாமல் சௌக்கியத்தின் தோற்றத்தைப் பெரும்பாலும் அவன்(அல்லாஹ்) உண்டாக்க மாட்டான். மேலும் இதற்கே (நிஸ்பத் இலாஹீ) அல்லாஹ்வோடு தொடர்பு என்று பெயர். இருந்த போதிலும் மருந்து சாப்பிடுகிறவனுடைய நோட்டம் யதார்த்தத்தில் அல்லாஹுத்தஆலாவின் தாத்தின் பேரிலேயே இருக்க வேண்டியது அவசியம். உண்மையில் சௌக்கியத்திற்காக அவனிடத்திலேயே உதவி தேடுவதும் அவசியம். மருந்து அல்லது வைத்தியன் பேரில் ஆதரவு வைப்பது நிம்மதியாயிருப்பது ஷpர்க்கு என்பதாகவும் உணர வேண்டியது அவசியம். வியாதியஸ்தன் மருந்தோ வைத்தியனோ வெளும் ஒரு திரை என்பதாகவும், அல்லாஹுத்தஆலாவே சௌக்கியம் அளிக்கக் கூடியவன் என்பதாகவும் உணர வேண்டும். இம்மாதிரியாகவே உலகத்தின் எல்லாக் காரியாதிகளுடைய நிலைமையும். விதை விதைப்பது, புருஷன் மனைவி சேருவது, ஆகாரம் அருந்துவது, தண்ணீர் குடிப்பது, ஒரு பாதத்திற்குப் பின் மற்றொரு பாதத்தை உயர்த்தி நடப்பது ஆகிய எல்லாமுமே காரணங்களாகும். ஆனாலும் மலை பெய்வதும், குழந்தை உண்டாவதும், பசி தாகம் தீருவதும், நாடிய தலம் தீருவதும் ஆகிய இவையெல்லாம் அல்லாஹுத்தஆலாவின் தோற்றத்தின் பேரில் தரிப்பட்டதாக இருக்கும். ஆகையால் காரியம் உண்டாவதற்குக் காரணங்கள் ஆயத்தமான பின்பு அல்லாஹுத்தஆலாவின் (தஜல்லீ) தோற்றத்தை கவனிப்பதனால் இது உண்மையான உதவி தேடுவதாகும்.மேலும்,

وَاِيَّاكَ نَسْتَعِيْنُ

**(இய்யாக்க நஸ்தஈன்)**

உன்னிடத்திலேயே உதவி தேடுகிறோம்' என்றதன் பொருள் மெய்hகவும் ஆகும். இல்லையாயின் பொய்யாகவும் ஷிர்க்காகவும் ஆகும். மேலும், இதுவே

فَاَيْنَمَا تُوَلُّ فَثَمَّ وَجْهُ اللّٰهِ

**(ப ஐனமா துவல்லூ பதம்ம வஜ்ஹுல்லாஹி)**

(அல்-குர்ஆன் 2:115)

'நீங்கள் எங்கு திரும்பினாலும் அங்கு அல்லாஹ்வின் முகம் இருக்கிறது' என்பதற்கும் பொருளாகும். ஆகவே மருந்து, வைத்தியன், மேகம், ஆண், பெண், உண்பது, குடிப்பது, நடந்து திரிவது மற்றறெல்லாமும் அல்லாஹுத்தஆலாவின் திருமுகத்தின் பேரழகின் கண்ணாடிகளாகும்.

**புதிதும் பூர்வீகமும்**

பிஸ்மில்லாஹ் என்பது அல்லாஹ்வின் திருவசனம். அது பூர்வீகமானது. அடிமையும் அவனுடைய நாவும் புதிதானவை. பூர்வீகம் புதிதுடன் சேராது. ஆகையால் பரிசுத்த குர்ஆன் புதிதான மனிதனுடைய நாவில் புதுமை நீங்கி பூர்வீகம் தோற்றமளிக்கும் வரையிலும்வருவது சாத்தியமில்லை. பரிசுத்த அல்லாஹுத்தஆலா பரிசுத்தமில்லாத இடத்தில் தன்னுடைய தோற்றத்தை வெளிப்படுத்துவதில் உரோஷமடையவனாக இருக்கிறான். (வெளிப்படுத்த மாட்டான்) அவன் தன் கிருபை பரோபகாரத்தைக் கொண்டு புதிதான இடத்தில் தோற்றமளிக்க நாடுவானோயானால் புதுமை என்னும் அசுத்தத்தைத் தன்னுடையஅனுக்கிரகம் என்னும் தண்ணீரைக் கொண்டு சுத்தப்படுத்திய பின்பு அவ்விடத்தில் தனது (தாத்து) தற்சொரூபம் அல்லது (ஸிபத்து) இலட்சணங்களைக் கொண்டு தோன்றுகிறான்.

ஆகவே குர்ஆனை ஓதுபவன் குர்ஆனை ஓதும்போது அவனுடைய நாவு புதுமையின் அசுத்தத்தை விட்டும் சுத்தமாகிவிட்டதாக(யகீன்-உறுதி கொண்டு) நிச்சயிக்க வேண்டும்.

اَنَ عِنْدَ ظَنِّ عَبْدِيْ بِيْ

**(அன இந்த ஒன்னி அப்தீ பீ)**

'எனது அடியான் என்னை எப்படி நினைக்கிறானோ அந்நினைப்பின் பிரகாரம் தோற்றமளிக்கிறேன்' என்ற கருத்தையும் உணருவது அவசியம். மேலும் ஓதுபவன் இப்பொழுது என்னுடைய நாவு புதியதல்ல என்று உறுதி கொள்ளும்போது அவன்

எதார்த்தத்தில் பூர்வீகமான நாவைக் கொண்டே குர்ஆன் ஓதுகிறான். ஆகவே குர்ஆனை ஓதுபவன் குர்ஆனின் வசனங்களும், அத்தியாயங்களும் ஓதப்படக்கூடிய கிராமபோன் பிளேட்டைப் போன்றவனாகிறான். கிராமபோன் பிளேட்டு சுயமே படிப்பதில்லை என்பது

தெரிந்த விஷயம். எனினும் அத ஒரு திரையாகும். அதற்குள்ளால் நல்ல இராகமுடைய படிப்பாளி படிக்கிறான்.

**கிராமபோன் உதாரணம்**

ஓதுவதைக் கேட்பவர்களும், தொழுகையில் இமாமைத் துயர்ந்தவர்களும் ஓதுபவரையும் இமாமையும் கிராமபோன் பெட்டியின் பிளேட்டைவிட அதிக விசேஷமுடையவர்களாகக் கருதாமலிருத்தல் வேண்டும். ஒருசமயம் ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீகு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய ஓதலைப் பிளேட்டாக ஆக்கிக் கொண்டு அல்லாஹுத் தஆலாவுடைய ஓதலைக் கேட்பதிலே மூழ்கிப் போயிருந்தார்கள்.

خُذُوهُ فَغُلُّوهُ ثُمَّ الْجَحِيمَ صَلُّوهُ

**(குதூஹு பகுல்லூஹு தும்மல் ஜஹீம ஸல்லுஹு)**

(அல்-குர்ஆன் 69:30,31)

'அவனைப் பிடியுங்கள், விலங்கிடுங்கள், நரகத்திலே கொண்டு போடுங்கள்' என்ற ஆயத்தின் தொனியை தங்களுடைய வாய் என்னும் பிளேட்டு மூலம் கேட்போழுது பிரக்கினையற்றுக் கீழே விழுந்து விட்டார்கள். தெளிவு பெற்றதும் ஜனங்கள் காரணம் விசாரிக்கும் பொழுது, 'எனக்கு ஒன்றும் தெரியாது அவனை பிடியுங்கள் விலங்கிடுங்கள் நரகத்திலே கொண்டு போடுங்கள் என்ற ஓசையை நான் கேட்டபோது, எனக்காகவே இந்தக் கட்டளை பிறப்பிக்கப்படுகிறது என்ற உணர்ச்சி வசமாகி பயந்து பிரக்கினையற்றுக் கீழே விழுந்து விட்டேன்' என்று சொன்னார்கள்.

**தொடர்பும் செயலில்(பனா) நாஸ்தியும்**

ஒவ்வொரு வஸ்துவிலும் நன்மை என்பதோ தீமை என்பதோ, ஒன்றொடொன்று சேர்த்து கவனிப்பதாலேயே ஆகும். இதே ஓதல், இதே தொழுகை, இதே நோன்பு இவைகள் தம்மில் புகழப்பட்டனவாகும். ஆனால் நீங்கள் இவற்றை உங்கள் பக்கம் சேர்ப்பீர்களானால் இகழிலும் இகழாகும். பரிசுத்த அல்லாஹு தஆலாவின் பக்கம் இவைகள் சேர்க்கப்படுமானால் நன்மை, தீமை என்ற குணபாட்டை விட்டும் விடுதலையடைகிறது. உதாரணமாக நீங்கள் நான் ஓதினேன்- நான் தொழுதேன்-நோன்பு வைத்தேன் என்பீர்களானால் சங்கையான (ஸூபியாக்கள்) மெஞ்ஞானிகளின் பழக்கத்தில் இவையெல்லாம் ஷpர்க்காகும். மேலும்,

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

**(இய்யாக நஃபுது வ இய்யாக நஸ்தஈன்)**

'உன்னையே வணங்குகிறோம், உன்னிடத்திலேயே உதவி தேடுகிறோம்' என்ற வசனத்தின் கருத்தை விட்டும் நிரம்பவும் கீழே விழுந்து விட்டது என்பது வெளிப்படையாகும்.

இய்யாக நஃபுது வஇய்யாக நஸ்தஈன் உடைய கருத்துக்கிலக்காக ஆவதற்கு எல்லாச் செயல்களையும் செயல்களைப் படைக்கும்படியான ஹக்குத்தஆலாவின் பக்கம் சேர்ப்பது மிகவும் அவசியமானதாகும். மேலும் ஒவ்வொரு செயலும் அல்லாஹுத்தஆலாவினுடைய தாத்திலிருந்தே உண்டாகிறது என்று உறுதி கொண்டு அதிலேயே பூரணமாய் மூழ்கி இருப்பதுவே (பனாபில் அப்ஆல்) செயலில் நாஸ்தி என்பதற்குக் கருத்துமாகும். பனா பில் அப் ஆலுடைய மர்தபாவை (பதவியை) அடைவது கடினத்திலும் கடினம், இலகுவிலும் இலகுவுமாகும். கடினம் ஏனென்றால், ஒவ்வொரு நேரத்திலும் மனிதனுடைய இருதயத்திலும் மூளையிலும் மறதி என்னும் திரை விழுந்து கொண்டேயிருக்கிறது. மேலும், அதினும் அதிகக் கடினமாகிறது அல்லாஹுத்தஆலாவும் திரைக்குள்ளாலிருந்தே வேலை செய்து கொண்டிருக்கிறான். இவ்விரண்டு திரைகளையும் ஒவ்வொரு கணமும் நீக்குவதானது, அல்லாஹுத் தஆலாவின் மறைவான உதவியின்றி பலவீனமான, மறதியான, அநியாயக் காரனான, மடையனான அடியானால் சாத்தியப்படாது. பனாபில் அப்ஆலுடைய மர்தபாவை அடைவது எளிதிலும் எளிதாக ஆகுவதானது இந்தப் பக்கம் சேர்ப்பதை அந்தப்பக்கம் சேர்ப்பதாகும். எப்படியெனில், ஸைது திண்ணக் கொடுத்தான் என்பது ஸைதின் பக்கம் (செயலைச்)சேர்ப்பதாகும். இது ஷிர்க்காகும். ஆனால் அல்லாஹுத்தஆலா ஸைதுடைய திரையிலே திண்ணக் கொடுத்தான் என்று இப்பக்கம் (ஸைதின் பக்கம் சேர்ப்பதை அப்பக்கம் (அல்லாஹ்வின் பக்கம்) சேர்ப்பதாகும். இதுவே கலப்பற்ற (அத்துவைதம்) தௌஹீதாகும்.-யகீனாகும்-ஈமானாகும் -இஸ்லாமாகும்- குர்ஆனுமாகும். ஆகவே, சொல்லுவதுயாதெனில், ஒவ்வொரு நேரமும் கவனம் திரையை விட்டும் நீங்கி திரைக்குள்ளாலிருக்கும் யதார்த்தச் செயலாளனின் பேரிலேயே விழுந்து கொண்டிருக்க வேண்டும்.

**(கவ்பு ரஜா) பயமும் ஆதரவும்.**

ஒவ்வொரு பிள்ளைக்கும் தன்னுடைய தகப்பனிடம் வரும்பொழுதும், தகப்பனை பார்க்கும்போதும் இருவகை நிலைமை ஏற்படுகிறது. ஒன்று பயம், மற்றது ஆதரவு. பயம் தகப்பன் நம்முடைய வேலைகளில் ஏதும் குறைப்பாட்டை பார்த்து கண்டிப்பாரே என்றும், ஆதரவு தகப்பன் நம்மீது அன்பு பாராட்டி சன்மானம் அளிப்பார் என்றும் ஏற்படுகிறது. ஆகையால் தகப்பனிடத்தில் பயத்தினால் நடுங்கவும் செய்கிறான். ஆதரவினால் தகப்பனுடைய சமூகம் கலியாண வீடாகவும் ஆகிவிடுகிறது. தகப்பன் சதாவும் சமூகம் சமூகம் அளித்துக் கொண்டிருப்பது முடியாத காரியமாகும். அதற்கு மாற்றாக அல்லாஹு ஸுபுஹானஹுவதஆலா மனிதனுடைய ஹிருதயத்தை திரைக்கு அப்பாலிருக்கக் கூடிய கோலத்தையும் விரைவில் எளிதாக எடுக்கக் கூடிய கண்ணாடியாக ஆக்கி வைத்திருக்கிறான். ஆனால், வெளிப் புலன்களும், உட்புலன்களும் ஒன்று சேர்ந்து அந்த இருதயக் கண்ணாடியை தேடப்பட்ட கோலத்தின் எதிரில் ஆக்க வேண்டும். அப்படியாயின், கண்ணாடியில் கோலம்

பதிவது போல் இருதயக் கண்ணாடியில் தேடப்பட்ட கோலம் பதியும். மேலும் தேடப்பட்ட அந்தப் பொருள் சதாவுமிருக்கவும், அதன் தரிசனம் நேமமாக இருக்கவும் செய்யும்.

நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம், வனத்தில் ஒருவனுக்குப் புலி எதிர்ப்பட்டு அவனை ஒரு தொந்தரவும் செய்யாது போய்விட்டது என்கிலும் அவன் கண்ணை மூடும் போதெல்லாம் புலி!புலி! என்று அலறி நடுங்கிக் கொண்டிருந்தான். இதற்குக் காரணமென்னவென்றால், புலி இவனுக்கு எதிர்ப்பட்ட சமயம் இவனுடைய மனக் கண்ணாடியும் எல்லாப் புலன்களும் ஒன்று சேர்ந்து புலியின் உருவத்திற்கு நேர்பட்டிருந்தன. அவ்வேளையில் இந்த மனிதனுடைய பார்வையில் புலியைத் தவிர்த்து வேறொன்றுமில்லாதிருந்தது. கண்ணுக்கு முன்னால் பெண்சாதி பிள்ளைகளும், காதில எவருடைய சப்தமும், புத்தியில் எவரைப் பற்றிய சிந்தனையும் ஹிருதயத்தில் எவருடைய பிரியமும் கற்பனையில் எதைப் பற்றிய கற்பனையும் ஆராய்ச்சியில் எதைப்பற்றிய ஆராய்ச்சியும் சுவையில் எதனுடைய ருசியும் நுகர்ச்சியில் எதனுடைய வாடையும், முடிவாக அந்த மனிதனுடைய வெளியிலும் உள்ளிலும் புலியைத் தவிர்த்து வேறொன்றுமில்லாதிருந்ததனாலேயாம். ஆகவே தொழுகையில் அடியார்களினால் வெளிரங்க, உள்ரங்கப் புலன்கள் ஒன்று கூடி மனதில் பரிசுத்த அல்லாஹுத்தஆலாவுடைய அதிகாரத்தின் வலுப்பத்தின் பயம் உண்டாகாமலிருப்பதும், அல்லது அவனுடைய கிருபாகடாட்சம் நன்றி உபகாரத்தின் ஆதரவு உங்களை அவன் பக்கம் முகநோக்கி வைக்க முடியாமலிருப்பதும் வெட்கப்படக் கூடிய விஷயமாகும்.

கேளுங்கள்! உங்களுடைய ஐம்புலன்களும் ஒன்று கூடி உங்கள் மனக் கண்ணாடியைப் பரிசுத்த அல்லாஹுத்தஆலாவின் பக்கம் முகநோக்கி வைப்பீர்களேயானால், உடனே அவனின் வலுப்பமும், மகிமையும், அன்பும், கிருபையும், பேரழகுடைய கோலமும் உங்களுடைய மனக் கண்;ணாடியில் நிலைப்பட்டு விடும். மேலும் பரிசுத்த (ஆன்மா) உலகத்தின் பக்கம் பறந்து செல்வதற்கு பயம், ஆதரவு என்ற இரண்டு இறகுகள் உங்களுக்குண்டாகி விடும். பின்பு நீங்கள் ஒவ்வொரு கணமு; பரிசுத்த சமூகத்திலேயே விஜயஞ் செய்து கொண்டிருப்பீhகள். ஸ்தூல சரீரத்தார் (சடவாதிகள்) இலட்சந்த தடவை தேடிய போதினும் உங்களை அடைந்து கொள்ளமாட்டார்கள். அப்படியவர்கள் அடைந்து கொண்ட போதிலும் உங்களுடைய ஸ்தூல பாகத்தையே பெற்றுக் கொள்வார்கள். ஜோதியான ஆன்ம பாகத்தையே அவர்களுடைய புதிதான கரங்கள் சதாகாலமும் தொட முடியாது.

اَوْلِيَآئِي تَحْتَ قَبَآئِي

**(அவ்லியாயீ தஹத்த கபாயீ)**

'என்னுடைய அவுலியாக்கள் எனது போர்வைக்குள்'

நான் (மேலே) சொல்லியிருக்கிறேன். நீங்கள் உச்சி தொடுத்து உள்ளங்கால் வரையிலும் ஜோதிமயமாகி விடுவீர்கள். சடவாதிகள் உங்களருகிலுங்கூட வந்தணுக சக்தி பெற

மாட்டார்கள். பெண்சாதி, பிள்ளை, கடை, வீடு, வாசல் இவைகளெல்லாம் அந்நிலையில் உங்களுடைய சரீர பொய்மையைக் கொண்டு சுகம் பெறுவார்கள். சந்தோஷமாவார்கள். ஆனால், உங்களுடைய ஒளிவான ஜோதி பாகத்தை அறவே அறிய மாட்டார்கள். மேலும் கேளுங்கள் 'அவுலியாயீ தஹத்த கபாயீ' என்பதன் கருத்தும் இதுவே. அதாவது என்னுடைய அவுலியாக்கள் எனது போர்வைக்குள் மறைக்கப்பட்டிருக்கிறார்கள்.

**மற்றுமோர் நுட்ப உவமை**

தந்தையிடம் எப்போதும் இருக்கக் கூடிய சிறு குழந்தைகள் போன்று உங்கள் நிலைமை ஆகவேண்டும். அக்குழந்தையின் மனதில் தந்தையின் பயமும், அவருடைய அன்பின் ஆதரவும் எப்பொழுதும் இருக்கவே செய்யும். இவ்வுதாரணத்தை கவனித்து ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். தகப்பனைப் பற்றிய பயமும், அவருடைய கிருபையின் பேரில் ஆதரவும், தகப்பனின் (தாத்து) உள்ளமையும் ஹக்குத் தஆலாவினுடைய (தாத்து) உள்ளமை, வலுப்பம், கிருபை, பேரழகுக்கு முன்னால் கலப்பற்ற இல்லாமையேயாகும். அடிமை அடிமையாகும் நிலையில் அவ்வடிமைக்கு மகிமையாகிறது ஒவ்வொரு கணமும் எஜமானோடு கட்டுண்டு, ஒவ்வொரு வேளையும் எஜமானுடைய பயமும் அவனுடைய கிருபையின்பால் ஆதரவும் அடிமையின் இருதயத்தில் பொங்கிக் கொண்டே இருக்க வேண்டும். காலமும் ஸ்தலமும் திரையாகாதிருக்க வேண்டும்.

**இஸ்முடைய அந்தரங்கம்**

(தாத்து) தத்சொரூபம் எப்பொழுதும் மறைந்ததாகவே இருக்கும். மேலும் அதனுடைய இலட்சணங்கள் வெளியானவையாயிருக்கும். எதுபோலவெனில் ஆப்பிள் பழத்தைப் போல். அதனுடைய நிறம், கோலம், வாடை முதலியனவெல்லாம் ஆப்பிளின் இலட்சணங்களாகும். அவை வெளிப்படையானவை. என்கிலும் ஆப்பிளின் தாத்து (இலட்சணங்களைக் கவனியாது ஆப்பிள் பழத்தை உருவப்படுத்தியது கொண்டே நம்முடைய மனதில் வரக்கூடிய கருத்து) வெளியில் (தென்படாமல்) மறைந்ததாகவேயிருக்கும்.

**(தாத்து) தத்சொரூபத்திற்கும் (ஸிபத்து) இலட்சணங்களுக்குமுள்ள வித்தியாசம்**

(ஸிபத்து) இலட்சணத்தினுடைய நிலை தன்னைக் கொண்டாவதில்லை. எனினும் அதுநிலைப்பதற்கு தாத்தளவில் தேவைப்பட்டதாகவிருக்கும். ஸிபத்துடைய தொடர்பு தாத்தின்பக்கமே ஆகிறது. எதன்பக்கம் ஸிபத்துக்களைச் சேர்க்கப்படுமோ அதுவே தாத்தாகும் என்பதுவும், தாத்து தன்னுடைய நிலையில் எதனளவிலும் தேவைப்பட்டதல்ல என்பதுவும் இதனால் தெளிவாக விளங்குகிறது. ஆனால், தாத்து வெளியாவதற்கு எப்பொழுதும் ஸிபத்து அவசியமாகும். ஸிபத்தின்றி தாத்து வெளியாகாது.

**தாத்தின் பேரில் ஸிபத்துக்களின் திரைகளும் மிஃராஜுடைய தத்துவமும்**

நீங்கள் எந்த சிருஷ்டியையும் எடுத்துப் பாருங்கள். எவ்விதத்திலும் அதனுடைய தாத்து தென்படுவது அசம்பாவிதம். ஆகவே, இதனால் சிருஷ்டிகர்த்தாவின் பரிசுத்த தாத்து எங்ஙனம்

தென்பட முடியும் என்பதை விளங்கிக் கொள்ளுங்கள். அது ஒரு போதும் முடியாது. அசம்பாவிதத்திலும் அசம்பாவிதமாகும். எனினும் ஆதியிலிருந்து அந்தம் வரையிலும் அதன் வெளிப்பாடு ஸிபத்துக்களின் திரையிலேயே ஆகிக் கொண்டிருக்கிறது. மேலும் ஆகிக் கொண்டே இருக்கும். கருத்து: தாத்தின் பேரில் ஸிபத்துக்களுடைய திரைகள் விழுந்துக் கொண்டிருக்கின்றன. மிஃராஜுடைய இரவில் இத்திரைகளே எடுபட்டுப் போயிருந்தன. ஆனால், இத்திரைகளெல்லாம் (ஸாலிக்கு) இறைவழிச் செல்பவனுடைய கவனத்தைக் கொண்டு கொழுகியதாகும். ஸாலிக்கு அல்லாஹ்வுடைய அனுக்கிரகத்தைக் கொண்டு இத்திரைகளையெல்லாம் தன்னுடைய பார்வையை விட்டும் உயர்த்திக் கொண்டு, தனக்குப் பேரும் அடையாளமும் கூட இல்லாத ஒரு பதவி வரையிலும் போய்ச் சேருகிறான். இதெ மர்தபாவுக்கு தாத்தின் தஜல்லீ (தோற்றம்) என்றும் தாத்தில் பனா(நாஸ்தி) என்றும் பெயராகும். இப்பதவியில் சேர்ந்ததும் ஸாலிக்குடைய பார்வை ஹக்குடைய பார்வையாக ஆகி விடுகிறது. மேலும் அவன் ஹக்குடைய சமூகத்தில் சேர்வதைக் கொண்டு,

مَنْ تُوْشُدَمْ تُوْمَنْ شُدِيْ

**(மன்தூஷுதம் தூமன் ஷுதீ)**

'நான் நீயானேன். நீ நானானாய்'

என்ற உதாரணம் மெய்hகும்படியான விதத்தில் பாக்கியம் பெற்றவனாகி விடகிறான். இதுவே மிஃராஜின் அந்தரங்கமாகும். ஆகவே திரைகள் பார்வையின் பேரில் விழுந்து கிடக்கின்றன. மேலும் அவை பார்வையை விட்டும் எடுபட்டுப் போகின்றனவென்றும், யதார்த்தத்தில் (திரை) இல்லை என்றும் தெரிய வருகிறது. இதனாலேயே தஸவ்வுபுடைய உலமாக்கள் ஸிபத்துக்கள் (ஐனுத் தாத்து) தாத்து தன்னே என்று நம்புகிறார்கள்.

**(தாத்தை விட்டும் ஸிபத்துக்களின் திரைகள் நீங்குவதற்கு உதாரணம்)**

ஸிபத்து தாத்தை விட்டும் நீங்கியிருக்க முடியாது. இதனால் ஒவ்வொரு ஸிபத்தும் ஹக்குத் த ஆலாவின் தாத்துடைய கண்ணாடி என்று உணருவது அவசியம். ஆகவே, ஹக்குத் தஆலாவுடைய தாத்து ஒவ்வொரு ஸிபத்துடைய திரையிலும் தன்னுடைய பரிபூரணப் பேரழகைக் காட்சியளித்துக் கொண்டிருப்பதாக ஆகிறது. ஆனால், எதுவரையிலும் கவனம் ஸிபத்தின் பேரில் விழுமோ அதுவரையிலும் தாத்து தென்படாது. இதற்கு உதாரணம், தங்கத்தினால் மோதிரம் செய்யப்பட்டதாக வைத்துக் கொள்ளுங்கள். தங்கமில்லையானால் அந்த மோதிரம் உண்டாகப் போவதில்லை. மோதிரம் உண்டான பிறகும் தங்கமே இருக்கிறது. ஏனென்றால் எதார்த்தத்தில் இருப்பது தங்கமேயாகும். ஆகவே எது வரையில் பார்வை மோதிரத்தின் கோலத்தில் பேரிலிருக்கிறதோ அதுவரையிலும் தங்கத்தின் தாத்து பார்வையை விட்டும் மறைந்தே இருக்கும். பார்வையை மோதிரக் கோலத்தை விட்டும் எடுக்கப்படுமேயானால் அப்பொழுது தங்கமே தங்கமாகும். நிலைமையோ, யதார்த்தத்தில்

மோதிரத்தின் கோலம் எடுபடவில்லை. ஆனாலும் பார்க்கிறவனுடைய பார்வையை விட்டும் அது எடுபட்டுவிட்டது. இதனால், இப்பொழுது மோதிரத்துடைய தாத்து தங்கத்தைப் பார்ப்பதை விட்டும் திரையாக இருக்கவில்லை. இதேமாதிரி ஸாலிக்குடைய பார்வையை விட்டும் எல்லா ஸிபத்துக்களின் திரைகளும் எடுபட்டு விடுகின்றன. ஹக்குத் த ஆலாவின் தாத்தே காணப்பட்டதாக ஆகி விடுகின்றது.

**(இஸ்மு) பெயர்**

கீர்த்தியும் வலுப்பமுடைய அல்லாஹுத்தஆலா தன்னுடைய ஏதோ ஒரு ஷ்ஃனின் ஜஅல்லாஹுத்தஆலா தன்னுடைய (இல்மே இஜ்மாவில்) தொகுப்பாக தன்னையும் சிருஷ்டியையும் அறியும்பொழுது அறியப்பட்டதற்கு'ஷ்ஃனு' என்றும், (இல்மே தப்ஸீலி) வகுப்பாக அறியும் பொழுது அறியப்பட்ட தன் தாத்துக்கு 'இல்மே இலாஹி' என்றும் அறியப்பட்ட சிருஷ;டியின் தாத்துக்கு 'இல்மே கியானி' என்றும் 'அஃயானே தாபிதா, ஹுறூபே ஆலியா' என்றும் சொல்லுவார்கள்ஸ உடையில் தன்னுடைய இல்முடைய மர்தபாவில் (அறிவின் ஸ்தானத்தில்) தன்னைப் பார்ப்பானேயானால் பார்க்கப்பட்ட அந்தக் கோலத்திற்கு இஸ்மு என்று சொல்வார்கள்.

மேலும் அது ஐன் தாத்தாக (தாத்து தன்னாக)வே இருக்கும். உதாரணமாக, ரஹ்மத்தே ஆம்மா (பொதுவான கிருபை) தாத்தின் மர்தபாவில் ஷ்ஃனுடைய கோலத்தில் மறைந்திருந்தது. (எப்படியெனில், வித்துக்குள்ளாலே மரத்தின் சர்வ பாகங்களும் மறைந்திருப்பது போல) அல்லாஹுதஆலா தன்னுடைய இல்மிலே (இல்லேம தப்ஸீலியிலே) ரஹ்மத்தே ஆம்மா என்னும் போர்வையை அணிந்தான். அதாவது இல்முடைய மர்தபாவில் ரஹ்மத்தே ஆம்மாவின் கோலத்தில் தோன்றினான்.. இல்முடைய மர்தபாவலி தோன்றி அந்தக் கோலம் ரஹ்மத்தே ஆம்மா என்ற இஜ்மாகும். இப்பொழுது அதே ரஹ்மத்தே ஆம்மா வெளியில் ரஹ்மான் என்ற இஸ்மாகும். (வெளியில் தோன்றிய) இந்த இஸ்மு லப்ளீ (மொழியப்பட்ட நாம்) முஸம்மா (தாத்து) அல்லாததாகும். என்கிலும் முஸம்மா தானாகிய இஸ்மென்னும் ரஹ்மத்தெ ஆம்மா உடைய கோலமாகிறது அதற்கு இந்த மொழியப்பட்ட ரஹ்மான் என்னும் இஸ்மு இஸ்மாகவிருக்கும்.

இதற்கு எளிதில் விளங்கக் கூடிய உதாரணம் வானம். அது வெளியாகும் முன்பு ஹக்குத்தஆலா உடைய தாத்தில் மறைந்திருந்த சமயம் தாத்து தானாகவேயிருந்தது. மேலும் அதற்கு ஷ்ஃன் என்று சொல்லப்பட்டிருந்தது. எப்பொழுது அல்லாஹுத்தஆலா இந்த வானம் என்னும் ஷ்ஃனைக் கொண்டு தன்னுடைய இல்மிலே தோன்றினானோ, அப்பொழுது அவன் அந்த வானம் என்னும் கோலத்துடைய போர்வையைப் போர்த்திக் கொண்டவனைப் போன்றவனாகிறான். இவ்வானத்தின் கோலம் வெளியிலே தோன்றுமுன் இல்முடைய மர்தபாவில் இஸ்மாக (இஸ்மேகினியாக)விருக்கும். மேலும், மொழிதலில் வரக்கூடிய வானம் என்ற பெயர் அந்த இஸ்முக்கு இஸ்மாக இருக்கும். இது முஸம்மா(தாத்து)வுக்கு வேறாக இருக்கும்.

**(இஸ்முல் அஃலம்) மகத்தான திருநாமமும் தெய்வீகத் தன்மையும், (இன்ஸான் காமில்) சம்பூரண மனிதனும்.**

(ஹையு) ஜிவனுள்ளவன், (முரீது) நாட்டமுடையவன், (காதீர்) தத்துவமுடையவன், (அலீம்) அறிவையுடையவன், (ஸமீஉ) கேள்வியுடையவன், (பஸீர்) பார்வையுடையவன், (கலீம்) பேச்சுடையவன் என்ற இவ்வேழு இலட்சணங்களும் சேர்ந்து (உலூஹிய்யத்து) தெய்வீகத் தன்மையாகும். இந்த மர்தபாவிலிருந்துதான் தேவைகளை நிறைவேற்றி வைத்தல் உண்டாகிறது. இதனாலேயே, அல்லாஹ் (என்ற இஸ்மு) வாகிறது தேவைகளைப் பூர்த்தி செய்து வைக்கக் கூடியதாக இருக்கும். சிருஷ்டிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து வைப்பது இந்த (உலூஹிய்யத்து) தெய்வீகத் தன்மை என்ற ஷஃனிலிருந்தே உண்டாகிறது. இதற்கு இஸ்முல் அஃலம் (மகத்தான திருநாமம்) என்றும் சொல்வார்கள். இஸ்முல் அஃலத்துடைய பொருட்டைக் கொண்டு எந்தக் காரியம் செய்யப்படுகிறதோ அது ஒருபோதும் மறுக்கப்படமாட்டாது. எதுவரையுமெனில் செத்த பிரேதங்களும் கூட உயிர்த்தெழுந்து விடும். ஆனால் அல்லாஹுத்தஆலாவின் இவ்வுதவி அங்கீகாரமாவதற்கு அருகதையை உண்டுபண்ணிக் கொள்வது அவசியமாகும். அல்லாஹுத்தஆலா தன்னுடைய இல்மிலே தன்னை ஏழு இலட்சணங்களைக் கொண்டு இலட்சணம் பூண்டவனாக பெற்ற பொழுது உலூஹிய்யத்துண்டானது. இதே கோலத்தின் பேரிலேயே மனிதனைப் படைத்தான். ஆகவே அவன் (மனிதன்) அல்லாஹ்வுடைய பிரதிநிதி என்று அழைக்கப்படுகிறான்.

خَلَقَ آدَمَ عَلٰى صُوْرَتِهِ

**(கலக ஆகதம அலா ஸூரத்திஹி)**

'ஆதமை (அல்லாஹ்) தன்னுடைய கோலத்தின் பேரில் படைத்தான்'

சம்பூரண (இன்ஸான் காமில்) மனிதனும் அந்த உலூஹிய்யத்தென்ற கோலத்தின்பேரில் வெளியிலே தோன்றிய கோலமாகவே இருக்கிறான். இப்பொழுது மனிதனுடைய பூரணத்துவம் தன்னை உணருவதாகவே இருக்கிறது. ஏனென்றால், எவன் தன்னைப் பார்ப்பானோ அவன் ஆண்டவனைப் பார்ப்பான்.

مَنْ عَرَفَ نَفْسَهُ فَقَدْ عَرَفَ رَبَّهُ

**(மன் அரப நப்ஸஹு பகத் அரப ரப்பஹு)**

'தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிவான்'

என்பதற்கு இதுவே பொருளாகும். ஆகவே உண்மையாதெனில், இன்ஸான் காமிலுடைய கோலம் அல்லாஹுத் தஆலாவுடைய கோலமாகவே இருக்கும்.

(**ரஹ்மான், ரஹீம்**)

**அருளாளன், அன்புடையோன்.**

அல்லாஹுத்தஆலாவுடைய கிருபை பொதுவானதாகவும் குறிப்பானதாகவும் இருக்கிறது. பொதுவானதென்பது காபிர், முஸ்லிம், மனிதன், மிருகம், அருகதையுள்ளவன், அருகதையில்லாதவன், யாவர்கள் பேரிலும் அவன் கிருபை செய்கிறான். மேலும், இவ்விதத்தில் அவனுடைய கிருபை எல்லா வஸ்துக்களையும் சூழ்ந்ததாக ஆகிவிட்டது. இதனால் அவனுடைய பெயர் ரஹ்மானாகும். மேலும் தகுதியுள்ளவர்கள் பால் ஒலித்தோடும் அருள் ஊற்றினால் அவன் ரஹீமாகவுமிருக்கிறான். ரஹ்மானுடைய வேலை உண்டாக்குவதாகும். ரஹீமுடைய வேலை எதில் அருகதையிருக்கிறதோ அதைப் பூரணத்துவம் வரையில் சேர்த்து வைப்பதாகும்.

**முடிவான கருத்து.**

முடிவான் கருத்து யாதெனில், பிஸ்மில்லாஹ்வில் உதவி தேடப்பட்ட அல்லாஹ்வின் நாமமாகிறது அதகொண்டு கருத்து இஸ்முல் அஃலமாகும். அது ஹக்குத் தஆலாவின் இஸ்மில் உலூஹிய்யத்தென்ற கோலமாகவும், வெளியில் இன்ஸான் காமிலுடைய கோலமாகவுமிருக்கும். மேலும் இந்த இஸ்முல் அஃலம் முஸம்மா தானாகவே இருக்கும். அதாவது ஹக்குத்தஆலாவின் தாத்து தானாகவே இருக்கும். ஆகையால் முஸம்மா தானாகிய இந்த அல்லாஹ் எனும் இஸ்மைக் கொண்டு உதவிதேடுவது ஹக்கல்லாததைக் கொண்டு உதவி தேடுவதாக ஆகாது. என்கிலும் ஹக்குத்தஆலா தன்னைக் கொண்டே உதவி தேடுவதாக ஆகும். இதுவே மெய்யான தவ்ஹீதுமாகும்.

எவ்விடத்தில் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய தோற்றமிருக்கிறதோ அவ்விடம் (ஹள்ரத்தே இலாஹி) தெய்வீகச் சமூகத்தின் தோற்றமுமிருக்கிறது. எவ்வகையான தேவையானாலும் சரி, தேவையுடையவன் தேவைகளை நிறைவேற்றி வைக்கக் கூடியவிடத்தில் உதவி தேடுவானேயானால் அவன் யதார்த்தத்தில் (ஹள்ரத்தே இலாஹி) தெய்வீகச் சமூகத்திலேNயு உதவி தேடுகிறான். ஆனால் (இதை) அவன் அறிந்தவனாயிருப்பின் முவஹ்ஹிதாகவும் (அத்துவைத சித்தாந்தியாகவும்) அறியாதவனாயிருப்பின் முஷ;ரிக்காகவும் (துவைத சித்தாந்தியாகவும்) ஆகிறான்.

யதார்த்தத்தில் ஒன்று மற்றொன்றளவில் தேவையானதும், தேவையைப் பூர்த்திப் பண்ணக் கூடியதுமான சங்கிலியில் பிணைக்கப்பட்டகைளான உலகிலுள்ள ஒவ்வொரு அணுக்களும் அல்லாஹுத்தஆலா உடைய சமூகத்தில் (தங்களுடைய) தேவை பூர்த்தியாவதற்காக மன்றாடுபவைகளாகவும், அவனுடைய சமூகத்தில் கையேந்தியவைகளாகவும் இருக்கின்றன.

எவன் (இதை) உணருகின்றானோ அவன் முவஹ்ஹிதாகிறான், எவன் உணரவில்லையோ அவன் முஷ;ரிக்காகிறான்.

**அஊது, பிஸ்மியின் முடிவு**

அஊது, பிஸ்மியுடைய விரிவுரை, வலிந்துரையினால் இந்த விஷயம் அவசியம் தெளிவாகி இருக்கக் கூடும். அதாவது, அஊது ஒளுவின் ஸ்தானத்திலிருக்கிறது. எவ்விதம் ஒளு(சுத்தம்) இல்லாது தொழுகை கூடாதோ அவ்விதமே சுத்தமில்லாது பரிசுத்தக் குர்ஆனைத் தொடுவது கூடாது.

குர்ஆனை ஓதுவீர்களானால் அல்லாஹ்வைக் கொண்டு (iஷத்தானை விட்டும்) காா்மானம் தேடுங்கள் என்றும் அல்லாஹு ஸுப்ஹான ஹுவதஆலாவுடைய திருவசனத்தின் ஆதாரத்தைக் கொண்டு குர்ஆனை ஓதுவதற்காக அஊது ஓதுவதான பரிசுத்தத்தின் ஸ்தானத்திலிருக்கிறது என்று தரிபடுகிறது. இந்தப் பரிசுத்தத்தைக் கொண்டு (நப்ஸு) மனம் பரிசுத்தமாகிறது கருத்தாகும். அதற்கு பரிசுத்தக் குர்ஆனின் பரிபாiஷயில் தஸ்கியத்துந் நபுஸி (மனத்தைப் பரிசுத்தப்படுத்துதல்) என்று சொல்வார்கள். எவ்வாறெனில்,

قَدْ أَفْلَحَ مَن زَكَّاهَا

**(கத் அப்லஹ மன்ஜக்காகஹா)**

(அல்-குர்ஆன் 91:9)

'அதை (நபுஸைப்) பரிசுத்தப்படுத்தியவன் சித்தியடைந்தான்'.

قَدْ أَفْلَحَ مَن تَزَكَّىٰ

**(கத் அப்லஹ மன் தஸக்கா)**

(அல்-குர்ஆன் 87:14)

('பரிசுத்தமடைந்தவன் சித்தியடைந்தான்' என்ற திருமறை வசனங்கள் வந்திருப்பது போன்று)

தஸ்கியா-பரிசுத்தப்படுத்துதல் நபுஸோடு சம்பந்தப்பட்டது. தஸ்பியா (தெளிவுபடுத்துதல்) கல்பு (அகம்) சம்பந்தப்பட்டது. பரிசுத்தப்படுத்தலில் கஷ்டமிருக்கிறது. தெளிவுபடுத்தலில் இலகுவிருக்கிறது. உதாரணமாக, தங்கம் பித்தளையுடன் சேர்ந்து விடுமானால், அத்தங்கம் எதுவரையில் காய்தல,; உருகுதலுடைய கஷ;டத்தை சகிக்கவில்லையோ அதுவரையிலும் இக்கலப்படத்தின் அழுக்குகளை விட்டும் பரிசுத்தமடைய முடியாது. மேலும் எந்த அளவுக்குக் கலப்படம் அதிகரிக்கிறதோ அந்த அளவுக்குத் தங்கத்தின் மதிப்பும் தாழ்ந்து கொண்டு போகும்.

எந்த அளவுக்குத் தெளிவாகிறதோ அந்த அளவுக்குத் தங்கத்தின் மதிப்பும் உயர்ந்து கொண்டு போகும். அப்பழுக்கற்ற தெளிவான பசுந்தங்கம் நகை ரூபத்தில் காதலியின் அழகு சௌந்தரியமான கழுத்தில் அழகையும் வடிவையும் உண்டு பண்ண முடியும்.

நப்ஸு என்பது யதார்த்தத்தில் நுண்ணிய ஆன்மாவின் ஓர் இறக்கத்திற்கு (கீழ் அந்தஸ்துக்குப்) பெயராகும். ஆன்மா தன்னிலே சுத்தமாகவும், தெளிவாகவும், பிரகாசமாகவுமிருக்கிறது. ஆனால் அதனுடைய முகம் கவனம் சரீரத்தை வளர்ப்பதின் பக்கமே ஆகிவிடுமானால், இருளான சரீரத்தின் சகவாசத்தினாலும், கலப்பினாலும் ஸ்தூலத் தடிப்பென்ற சேர்மானம் உண்டாகி இருளடைந்து விடுகிறது. இவ்வேளையில் இந்தப் பிரகாசமான ஆன்மாவாகிறது, இருளுடைய கலப்பின் காரணத்தால், நப்ஸு என்று பெயர் ஏற்றுக் கொண்டது. மேலும் ஜோதிஜ உலகின் பக்கம் பறப்பதை விட்டும் பேறு கெட்டதாகவும் ஆகிவிடுகிறது. ரூஹுடைய நுட்பம் (மிருது) ஸ்தூலக் கலக்கத்தினால் கலக்கமுற்றதாகித் தடிப்பமாகிவிட்டது. தடிப்பு கனத்துக்கு அவசியமாகும். கனமான, தடிப்பான ஒவ்வொரு வஸ்துவின் முகமும் கீழ்திசையிலேயே போய்க் கொண்டிருக்கும். இதற்கு நேர்மாற்றமாக மிருதுவானதின் முகம் மேல் நோக்கியே போய்க் கொண்டிருக்கும்.

எவ்விதமாகத் தங்கம் அழுகு;கு, கலப்படத்தை விட்டும் சுத்தமாவதற்குக் காய்தல், உருகுதலுடைய கஷ;டமில்லாது வெற்றியாக மடியாதோ அதேவிதமாக, ஆன்மாவும் கடுமையான தவப்பழக்கத்தின் கஷ;டத்தை சகிக்காமல் கடலத்தின் கலப்பு, கலக்கத்தின் காரணத்தாலான நப்ஸு என்ற கோலத்தை விட்டும் விடுதலை பெறமுடியாது.

குர்ஆனை ஓதுபவன் யதார்த்தத்தில் நப்ஸு ரஹ்மானி (ஹக்கின் சமூகம்) என்ற சமூகத்தின் வானவெளியில் பறப்பதற்கு நாடுகிறான்.. ஆனால், தடிப்பம் தடை செய்து கொண்டிருக்கிறது. ஆகையினால் அஊதின் காரணமான இந்த தடிப்பு, கலக்கத்தை விட்டும் ரூஹைத் துப்புரவாக்கிக் கொண்டு கலாமு றப்பானீ( ஆண்டவனுடைய வசனம்) என்ற உயர்ந்த வானவெளியில் பறக்க வேண்டும்.

கல்பைத் தெளிவாக்குவாற்கு உதாரணம், ஒரு கண்ணாடியில் ஏற்பட்ட அழக்கு, களங்கம் மிகவும் இலகுவாக நீக்கப்படுவது போலாம். ஏனெனில் கண்ணாடி தடிப்பத்தை அருந்த (ஏற்றுக் கொள்ள) அருகதையற்றதாகும். அதனுடைய முகத்தில் வெறும் ஒரு திரைதான் விழுந்திருந்தது. அதை இலேசாக நாம் நீக்கிவிட முடியும். ஆனால் நபுஸோ ஸ்தூக் கலக்கத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது. எப்படியென்றால், தங்கம், பித்தளை முதலியவற்றின் கலப்படத்தை ஏற்றுக் கொண்டதுபோல் இதனாலேயே நபுஸைத் துப்பரவு செய்வதற்கு தஸ்கியா என்ற பதமும், கல்பை துப்புரவு செய்வதற்கு தஸ்பியா என்ற பதமும் புழங்கப்படுகின்றன.

அஊது ஓதும் பொழுது தஸ்கியா, தஸ்பியா (துப்புரவு செய்தல், தெளிவுபடுத்தல்) இரண்டும் உண்டாவத அவசியம். ஏனென்றால், நபுஸும், கல்பும் சுத்தமானதாக ஆக்குவதற்காக-அதாவது, சுத்தமான நபுஸும், தெளிவான் கல்பும் இவ்விரண்டும் இரண்டு இறகு போன்றாவதற்காக.

ஆனாலும் இறகுகளில் எதுவரையிலும் வலுவில்லையோ அதுவரையிலும் பறக்க முடியாது. அதற்குரிய வலுவை உண்டுபண்ணிக் கொள்வதற்கு உபாயம் பிஸ்மில்லாஹ்வாக இருக்கும். பிஸ்மில்லாஹ்வின் பொருட்டினால் இறகுகளுக்கு மாத்திரம் வலு ஏற்படுவதில்லாமல் வெளிரங்க, உள்ரங்க எல்லாப் புலன்களிலும் அதனுடைய ஆதிசக்தியும், ஜோதியும், விசாலமும் நிறைந்து விடுகின்றன. மேலும் கட்டுப்பாட்டை விட்டும் கட்டுப்பாடில்லாத நிலைமையை உண்டாக்கிக் கொள்கிறது. அத்துடன் அந்த யதார்த்த சதானந்த சொர்க்கத்தில் நுழைந்துவிடுகிறது.

**சொர்க்கத்தின் அந்தரங்கச் சுருக்கம்**

ஆலம் மிதால்(சூட்சும உலகம்) ஆலமுஷ் ஷஹாதத் (ஸ்தூல உலகத்)தின் கண்ணாடியாகும். அந்தக் காண்ணாடி (ஜவாஹிர்) அதாரப் பொருளைப் போன்று (அஉரான்) ஆதேயப் பொருளின் கோலங்களையும் எடுத்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு அதிநுட்பமாக இருக்கிறது. (ஜவ்ஹர்) ஆதாப் பொருள் என்பது தன்னாலேயே நிலைத்திருக்கக் கூடியது. எப்படியெனில் மனிதனுடைய கன்னத்தைப் போலாம். (அர்ள்) ஆதேயப் பொருள் என்பது தன்னுடைய நிலையில் ஜவ்ஹரின் பக்கம் தேவையானதாக இருக்கும். எப்படியெனில், கன்னத்தின் நிறத்தைப் போலாம். வெளிரங்கக் கண்ணாடி நிறத்தின் கோலத்தை எடுத்துக் கொண்;ட போதிலும் ஜவ்ஹராகிய கன்னத்துடனேயேதான் எடுக்கும். கன்னத்துடைய கோலத்தைத் தனிமையாகவும் நிறத்தின் கோலத்தைத் தனிமையாகவும் எடுக்க முடியாது. ஆனால் சூட்சமக் கண்ணாடியாகிறது கன்னத்தின் துணையின்றி நிறத்தின் பூறாக் கோலத்தையும் எடுத்துக் கொள்ளும். இதெ மாதிரி செய்கிறவனுடைய தாத்தைக் கொண்டோ அல்லது சொல்பவனுடைய தாத்தைக் கொண்டோ நிலைக்கக் கூடிய சொல்லோ அல்லது செயலோ சூட்சமக் கண்ணாடியில் ஒரு தனிக் கோலத்தில் தென்படக் கூடியதாகும். ஆனால், சில வேளைகளில் ஒவ்வொரு வஸ்துவினுடைய கோலமும் அது எப்படி ஸ்தூல உலகத்தில் இருக்கிறதோ அதே கோலத்தில் சூட்சமக் கண்ணாடியிலும் தோற்றமளிக்கும். மேலும் சில சமயம் இன்னுமொரு நிறத்தை (கோலத்தை)க் கொண்டும் தோற்றமளிக்கும். ஆனாலும் இந்த இரண்டாவது நிறத்திற்கு முந்திய நிறத்துடன் ஏதோ ஒருவித சம்பந்தம் அவசியம் இருந்தேயாகும். எப்படியென்றால், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சொற்பிறகாரம் இல்முடைய கோலமாகிறது சூட்சம உலகத்தில் பாலின் கோலமாகவிருந்தது. இல்மிலும் பாலிலும் அநேக சம்பந்தங்கள் இருக்கின்றன. அவை தத்துவ ஞானிகளுக்கு மறைந்தவையல்ல. அவற்றிலொன்று, பால் இருதயத்திற்கும், மூளைக்கும் பபலமளிப்பது போல இல்மும் இருதயத்திற்கும் மூளைக்கும் அந்தரங்க சக்தியை அளிக்கிறது. பால் தன்னில் மறைந்திருக்கக் கூடிய அநேக வஸ்துக்களை வெளியாக்கக் கூடியதாகவும் வெளியாகும் இடமாகவும் இருக்கிறது. இதே மாதிரி இல்மும் ஆணிரக்கனக்கான இரகசியங்களும், ஞானமும் உற்பத்தியாகும் ஊற்றுக் கண்ணாகவிருக்கிறது. எப்படியும் சூட்சமக் கோலத்திற்கு (ஸ்தூல) உலக கோலத்தோடு அவசியம் தொடர்பு இருந்தேயாகும். இச் சம்பந்தங்களை அறியக் கூடியவர்கள் ஒருபோதும் கனவுக்கு விளக்கம் சொல்வதில் தவறிழைக்க மாட்டார்கள். மேலும் அகம் திறந்தவர்கள் தங்களுடைய விளக்கத்தில் ஏமாற்றமடைய மாட்டார்கள். சூட்சமக்

கோலங்களுக்கும் ஸ்தூலக் கோலங்களுக்கும் மத்தியில் சம்பந்தத்தின் யதார்த்தத்தை எந்த அளவுக்கு அதிகமாக உணர்ந்துள்ளார்களோ அந்த அளவுக்கு கனவின் விளக்கத்தில் மெய்யானவர்களாவார்கள்.

மௌத்து (மரணம்) ஜவ்ஹராக இல்லாதிருக்கிறது. எனினும். அது அரளாக இருந்தும் கியாமத்து நாளையில் ஒரு தும்பை ஆட்டின் கோலத்தில் வெளியாகும். இதேமாதிரி கலிமா தம்ஜீது (மூன்றாவது கலிமா) சொர்க்கலோகத்தில் மரங்களின் கோலத்தில் வெளியாகும். இவையெல்லாம் ஸஹீஹான(சரியான) ஹதீதுகளினால் தரப்பட்ட சங்கதிகளாகும்.

இப்போது சொல்லப்பட்ட வியாக்கியானத்தினால் உங்களுக்கு சொர்க்கத்தின் யதார்த்தம் விளங்கியிருக்கக் கூடும். அதுவாகிறது, யதார்த்தத்தில் சொர்க்கலோகமாகிறது பரிசுத்த குர்ஆனின் சூட்சமக் கோலமாகும். குர்ஆன் ஷரீபின் ஒவ்வொரு பரிசுத்த அட்சரங்களும் தனித்தனியாகவும் ஒவ்வொரு பரிசுத்தப் பதமும் அத்தியாமும் சொர்க்க லோகத்தில் ஒவ்வொரு தனித்தனிக் கோலங்களில் தோற்றமளிக்கும். இதேமாதிரி ஹவுளுல் கவ்தரும் யதார்த்தத்தில் அந்தப் பரிசுத்தக் குர்ஆனின் இன்னுமொரு சூட்சமக் கோலமாகும். ஏனெனில் சூட்சம உலகத்தில் ஒரு வஸ்து பல கோலங்களிலும், நிறத்திலும் வெளியாகிக் கொண்டிருக்கும். அவைகளை ஆரிபீன்(மெஞ்ஞானி)களைத் தவிர்த்து ஏனையோர் அறிய மாட்டார்கள்.

பாருங்கள்! பாலைவிட வெண்மையாகவும் தேனை விட அதிமதுரமாகவுள்ள தண்ணீரையுடையதும், ஓரங்களில் நட்சத்திரங்களை விட அதிகப் பிரகாசமுள்ள பாத்திரங்களுள்ளதும், அருந்துபவன் பின் ஊழியூழி காலம் தாகிக்காத தண்ணீரையுடையதுமான இந்த ஹவுளுல் கவ்தராகிறது பரிசுத்தக் குர்ஆன் ஷரீபாக இருக்கும். பிரகாசத்திற்க மேல் பிரகாசமான, மதுரத்திற்குமேல் மதுரமான அதன் கருத்துக்களானவை அந்த ஆற்றின் தண்ணீராகும். குர்ஆன் ஷரீபின் ஒவ்வொரு வசனங்களும் அதன் பாத்திரங்களாகும்.

அல்லாஹுத்தஆலாவுடைய சமூகம் சேர விரும்பும் (தாலிலு) தேட்டமுடையவன், பரிசுத்தக் குர்ஆன் ஷரீபுடைய அறிவு விளக்கம், அகமிய ஞான உணர்ச்சிகளைக் கொண்டு தகை தீருவது போல வேறெந்தப் பானத்தைக் கொண்டும் தனை தீர முடியாது. எவனொருவன் குர்ஆனென்னும் ஹவுளுல் கவ்தருடைய பானத்தை அருந்தினானோ அவன் வேறெந்தக் கிதாபின் பக்கமும் திரும்பத் தேவையற்றவனாகி விடுகிறான். மேலும், அவன் பின்பொரு போதும் தாகங் கொள்ளாத விதத்தில் தகை தீர்ந்து விடுகிறான்.

இரண்டாவது உதாரணம்: சொர்க்கலோகத்தின் கனிகளின் சம்பந்தமாக அல்லாஹு ஸுப்ஹானஹுவதஆலா

لَّا مَقْطُوعَةٍ وَلَا مَمْنُوعَةٍ

**(லாமக்த்தூ அதின் வலாமம்னூ அதின்)**

(அல்குர்ஆன் 56:33)

'(அவை) பறிக்கப்பட்டதுமல்ல, (சொர்க்கவாதிகளின் தொண்டைக்குள் இறங்குவதை விட்டுத்) தடுக்கப்பட்டதுமல்ல' என்று திருவுளமாகியிருக்கிறான்.

மேலும் ஒரு கனியை திண்பவனின் நாட்ட, தேட்டத்திற்குத் தக்கவாறு பல கனிகளின் ருசிகளையும் கொடுக்கிறது.

كُلَّمَا رُزِقُوا مِنْهَا مِنْ ثَمَرَةٍ رِزْقًا قَالُوا هٰذَا الَّذِي رُزِقْنَا مِنْ قَبْلُ وَأُتُوا بِهِ مُتَشَابِهًا .

**(குல்லமா ருஸிகூ மின்ஹா மின்மரத்தின் ரிஸ்கன் காலூஹாதல்லதீ ருஸிக்னா மின்கப்லு வ உதூபிஹீ முதஷாபிஹா)** -அல்-குர்ஆன்

பாருங்கள்! பரிசுத்தக் குர்ஆனுடைய வசனங்களும் இதே நிலையை தம்முட் கொண்டுள்ளன. அதாவது து பரிசுத்தக் குர்ஆனின் மனம் பொருந்திய மரத்தை விட்டும் அப்புறப்படுத்தப்பட்டதுமல்ல. மேலும் அது பேரின்பத்தையும் பிரயோஜனத்தையும் அளிப்பதிலிருந்து மெய்hன தேட்டமுடையவனைப் பேறுகெட்டவனாகவும் ஆக்காது.

**(இன்னல் குர்ஆன தூலுத்பின் வதூவுஜூஹின்)**

'பரிசுத்தக் குர்ஆன் நிரம்ப மிருதுவையும், அநேகவிதக் கருத்து வழிகளையும் உடையது' என்று ரஸூலு; ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமாகியது போல் குர்ஆனுடைய ஒவ்வொரு கலிமாவும் (பதமும்)தேட்டமுடையவனின் அனுபோகத்திற்கு தக்கவாறு ருசியை அளிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறது.

(அல்ஹம்துலில்லாஹ்)

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்குரியது.

*சம்பூரணம்.*

மௌலானா மௌலவி இமாமுல் ஆரிபீன், ஸுல்தானுல் வாயிளீன், பஹ்ருல் ஹகாயிகு வத்தகாயிகு, ரயீஸுல் மஜாதீபு, ஹைதராபாத் ஸர்க்கார் வாயிஸ் ஆலீ அஷ்ஷாஹ் முஹம்மது அப்துல் காதிர் ஸூபி ஹழ்ரத் அவர்கள் தரீகத்துச் சகோதரர், காமரான் வயர்லெஸ் சூப்ரிண்டெண்டெண்டு ஜனாப் மௌலவி இல்யாஸ்கான் சாஹிபு அவர்களுக்கு வரைந்த

**ஞானத் தபால்.**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

எனது சங்கைக்குரிய சகோதரர் ஆலீ ஜனாப் மௌலவி இல்யாஸ் கான்சாகிபு (அவர்களது சீரும் சிறப்பும் ஓங்குக) சமூகம்:

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாதுஹு.

தங்களின் அன்பான கடிதமும் அருமையான அன்பளிப்பும் சரியான சந்தர்ப்பத்தில் எனக்கு கிடைத்தன. என் மனமும் உயிரும் அதை ஏற்றுக் கொண்டன. மேலும் சர்வகாலமும் சித்த சுத்தியுடன் உங்கள் ஹக்கில் துஆச் செய்யும்படியாகவும் என்னை ஆக்கி வைத்துவிட்டன.

நல்லது! இவையெல்லாம் உலக சம்பந்தமான காரியங்களாகும். முக்கியம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், தங்களுடைய பரிதாபத் துடிதுடிப்பு நிலையே அதற்கு மருந்து அதே பரிதாப நிலையாகும். எப்போது பரிதாபத் துடிதுடிப்பு நிலை ஏற்படுகின்றதோ அப்போது எனது நண்பனுடைய (தஜல்லீ) தோற்றம் உண்டாகிறது. மேலும் அத்தோற்றம் நம்முடைய பரிதாபத் துடிதுடிப்பான நடனத்தை அதற்குக் காண்பிக்க வேண்டுமென்றும் விரும்புகிறது என்பதை மனதில் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஆகையால் அந்நேரத்தில் தாங்கள் எழுந்து அங்கும் இங்கும் நன்றாக ஓடியாடுங்கள். குதித்து கூத்தாடுங்கள். மேலும் இப்பரிதாபத் துடிதுடிப்பாகிறது ஏதோ ஒரு பெரிய ஆனந்தம், செல்வம், அந்தரங்க வெளிரங்க அருட்கொடை ஆகியவற்றின் முன்னறிவிப்பாக அமைந்துள்ளது என்பதையும் மனதில் உறுதி கொள்ளுங்கள். அடுத்து முஷhஹதா, முஹாகபா பற்றிக் கவனிப்போம். இதுபற்றியும் தங்களுக்கு நேரிலும் சொல்லியுள்ளேன். தபால் மூலமும் கொஞ்சம் எழுதியுள்ளேன். மீண்டும் சொல்வது யாதெனில்:-

தற்காலத்தில் கலப்பற்ற (மஹ்ளு) தாத்தின் பக்கம் கவனத்தைத் திருப்பி வைக்கக் கூடிய ஆற்றலுடைய மஹான்கள் அபூர்வத்திலும் அபூர்வம். எஞ்சியவர்களோ (கியால்) கற்பனையுடையதும்(வஹ்மு) பிரமையுடையதுமான உருவத்தைக் காட்டுவதின் மீதே அவர்களின் தொழில் நடந்து கொண்டிருக்கிறது.

எதுவரையிலும் புலன்களின் ஸ்தானம் இருக்கிறதோ அல்லாஹ்வின் பரிசுத்த தாத்தானது அதைவிட்டும் மிகவும் அப்புறப்பட்டதாகவிருக்கும். பார்க்கவும் முடியாது, கேட்கவும் முடியாது, எட்டிக் கொள்ளவும் முடியாது, எட்டிக் கொள்ளாமையே எட்டிக் கொள்வதாகும். எட்எக் கொள்வதே எட்டிக் கொள்ளாமையாகும். நீங்கள் எதையும் பெற்றுக் கொள்வதானது யதார்த்தத்தில் ஒன்றுமே பெற்றுக் கொள்ளாததாகும். ஏனென்றால் ஹுவல் பாத்தின் (அவன்

உள்ளானவன்) என்பதற்கு ஸ்தானம் பரிசுத்த தாத்தாக இருக்கும். ஹுவல் ளாஹிர் (அவன் வெளியானவன்) என்பதற்கு ஸ்தானம் அவனுடைய ஸிபத்து (இலட்சணங்)களுடைய குறிப்புக்களின் மைதானமாயிருக்கும். எதுவரையில் குறிப்பு, கட்டுப்பாடு என்ற வரம்பிருக்கிறதோ அதுவெல்லாம் அல்லாஹ்வின் தாத்தல்லாததாயிருக்கும். (ஐனிய்யத்து) ஒற்றுமையாகிறது தாத்துடைய அந்தரங்கத்தோடு கொளுகியதாகவும், (கைரியத்து) வேற்றுமையாகிறது அதனுடைய குறிப்புகளோடு கொளுகியதாவுமிருக்கும். குறிப்பின் புறத்தால் ஒவ்வொரு வஸ்துவும் ஹக்கல்லாததாகும். எப்பொழுது குறிப்புகள் நீங்கி விடுகின்றனவோ அப்பொழுது ஹக்கே ஹக்குதான். எப்பொழுது நீங்கள் இல்லாமலும், ஒரு வஸ்துவாக ஆகாமலும் போய்விடுகிறீர்களோ அப்பொழுது மற்ற வஸ்துகளை எப்படி பார்க்க முடியும்? உணர முடியும்? எது வஸ்துவாக ஆகுமோ அதுவே மற்றதை பார்க்கும், உணரும். இங்கு உண்டாயிருப்பதுவே திரையாகும். எப்பொழுது நீங்கள் பார்த்தீர்களோ அல்லது உணர்ந்தீர்களோ அப்பொழுது நீங்களே உங்களுடைய திரையில் மறைக்கப்பட்டவர்களாவீர்கள். இருக்கக் கூடியது நீங்களேதான். ஆனால், உங்கள் பேரில், உங்களுடைய நான் என்னும் திரை விழுந்திருக்கிறது. எப்பொழுது உங்களுடைய நான் என்பது அழிந்து போகுமோ அப்பொழுது அவனுடைய யதார்த்தமான நான் வெளியாகும். எதுவரையில் நீங்கள் வெளியானவர்களாக இருக்கிறீர்களோ, அதுவரையில் அவன் உள்ளானவனாக இருப்பான். எப்பொழுது நீங்கள் அவனை வெளியில் கொண்ட வருவீர்களோ அப்பொழுது நீங்கள் உள்ளிலாவீர்கள். அவன் தன்னை உங்களுடைய திரையிலே மறைத்துக் கொண்டு உங்களை வெளியாக்கி இருக்கிறான். இப்பொழுது நீங்கள் உங்களை (அவனில்) மறைத்து அவனை வெளியாக்குங்கள்.

هَل جَزَاءُ الْاِحْسَانِ اِلَّا الْاِحْسَانُ

(ஹல் ஜஸாஉல் இஹ்ஸான் இல்லல் இஹ்ஸான்)

(அல்-குர்ஆன்)

'உபகாரத்திற்கு உபகாரமேயன்றிக் கூலி வேறில்லை.'

என்பதன் பொருள் இதுவேயாகும். இதுவே கருத்தாகும். அதாவது, நீங்கள் வெளியிலிருந்து புறப்படுங்கள். உள்ளுக்குள்ளாலே போங்கள். அவன் உள்ளாலிருந்துக் கொண்டு உங்களை வெளியாக்கினது போல நீங்கள் அவனுடைய இந்த உபகாரத்திதுக்குப் பிரதி செய்யுங்கள். கருத்து: உபகாரத்திற்குப் பிரதி உபகாரமாகும்.

ஒரு பெரியாரைப் பார்ப்பதோ அல்லது அவருடைய பரிசுத்த சமாதியை தரிசிப்பதோ அந்தப் பெரியாரோ அல்லது சமாதியோ வெளியிலிருக்கும் பொழுதுதான் புலனாகும். எது வெளித் தோற்றத்திலிருக்கிறதோ அது (ஹக்கு) அல்லாததாகும். அப்பொழுது என்ன பிரயோஜனம் ஏற்படும்? எவ்விதம் நீஞ்கள் (ஹக்குக்கு) வேறோ இதே மாதிரி அந்தப் பரிசுத்த சமாதியும் அந்தப் பெரியாரும் உங்களோடு வேறென்ன பதில் கூட்டானவர்களாகும். மேலும், குறிப்பும்

கண்டிப்புமாகும். ஒரு கட்டுப்பாடான பொருள் இன்னொரு கட்டுப்பாடான பொருளைப் பார்ப்பதனால் என்ன பிரயோஜனமாகப் போகிறது? கருத்தாவது: உங்கள் காலிலோ கழுத்திலோ இன்னுமொரு விலங்கு போடப்பட்டதாகும். நீங்கள் லாஇலாஹவுக்குள் தன்னையே அழிக்க வேண்டியதாகவிருந்தது. இப்பொழுது ஒரு பொருளல்ல. இரண்டு பொருள் உண்டாகிவிட்டது. எதுவரையிலும் இவ்விரண்டு பொருளும் அழியவில்லையோ அதுவரையிலும் ஹக்குத்தஆலாவின் பரிசுத்த தாத்தின் காட்சி அசம்பாவிதமாகும்.

இந்தப் போதனை உங்களுக்குப் பெரும்பாலும் நிரம்பக் குறைவாகவே கிடைக்கும். கிடைக்கவும் செய்யாது. அல்லாஹ் நாடினாலே ஒழிய. இப்பொழுது வெளியிலிருந்து உள்ளின் பக்கம் எப்படிப் போகிறது அல்லது குறிப்புக் கட்டுப்பாடுகளை எவ்விதம் நீக்குவது? ன்ற வினா எழுகின்றது. அதற்கு வழியாகிறது: எல்லாத் தோற்றங்களையும் அழிந்தது, இறந்தது என்று உறுதி கொள்ளுங்கள். இவைகளில் (காணப்படும்) உசும்புதல், ஒடுங்குதல் அத்தனையையும் மரணமற்ற உயிருள்ள அல்லாஹுத் தஆலாவின் பக்கம் சாட்டிவிடுங்கள். ஏதாகிலும் ஒரு பொருள் (உருவம்) உடைய சப்தத்தைக் கேட்பீர்களானால் அந்த உருவத்தை ஒரு மண்டபம் (குப்பா) என்று நம்புங்கள். அதனுடைய சப்தத்தை மண்டபத்தினுடைய சப்தமல்ல. மண்டபத்தினுடைய எதிரொலி சப்தம் என்று உறுதியாக அறிந்து கொண்டே நடவுங்கள். எதுவரையிலுமென்றால், உங்களுடைய சப்தத்தையும் கூட மண்டபத்தின் எதிரொலி(அதாவது ஒரு உயிருள்ள வஸ்துவின் சப்தத்தைப் பிரதிபலிக்கிறது) என்று ஒவ்வொரு கணமும் உறுதிப்படுத்திக் கொண்N;ட போங்கள். இதேமாதிரி ஒவ்வொரு வஸ்துவினுடைய பார்வை, கேள்வி, கந்தம், ஸ்பரிசம், உருசி எல்லாவற்றையும் அவையனைத்தையும் இதேவிதமாகவே உறுதிப்படுத்திக் கொண்டே போங்கள். எந்த வஸ்துவை அருந்துவீர்களோ அதன் உருசியை அந்த உயிருள்ள மெய்ப்பொருளினுடைய உருசி என்று உறுதிப்படுத்திக் கொண்டேயிருங்கள். ஒவ்வொரு தோற்றத்திலும், கற்பனையுருவத்திலும் அந்த மெய்யன்பனுடைய காட்சி, அவனுடைய அசைவு, ஓடுங்குதல், வார்த்தை, கேள்வி இவற்றைத் தரிபடுத்திக் கொண்டே இருங்கள். இழுத்திழுத்து உருப்படுத்திக் கொண்டு போகக் கூடிய சிரமமும் அவசியமும் இல்லாமல் ஒழியுமளவு ஸ்திரப்படக் கூடியவிதமாக, இந்த முறாகபா பலப்படும் வரையிலும் செய்து கொண்டே இருங்கள். எதுபோலெனில், கண்ணில் பார்வை இருக்கிறது. கறுப்பு வெள்ளைக்கிடையில் பிரித்தறிய அதற்கு ஒரு சிரமமும் தேவைப்படுவதில்லை. நாவில் உருசி இருக்கிறது. இனிப்பு கசப்பைப் பிரித்தறிய அது சிரமப்படுவதில்லை. எப்பொழுது நாவில் ஒரு வஸ்து வருகிறதோ அதன் உருசியை அது உணர்ந்துக் கொள்கிறது. கண் முன்னால் எந்த வஸ்து வருகிறதோ அதன் நிறத்தைக் கண் தெரிந்து கொள்கிறது. காதில் எந்தச் சப்தம் மோதுகிறதோ அதன் யதார்த்தத்தை காது உணர்ந்து கொள்கிறது. இதே மாதிரியாக இந்த முறாகபா ஸ்திரப்படுமானால், பின்னால் தன்னையும் செத்த பிரேதமாக, புலனற்றதாக, உசும்புதலற்றதாக பெற்றுக் கொள்ளப்படும்.

(பின்பு) எப்பொழுதாகிலும் உங்களுக்குள்ளாலிருந்து நான் என்னும் சப்தம் வெளிப்படுமானால் நீங்கள் சிரமமெடுத்தாலும் கூட அது உங்களோடு சார்ந்ததாகாது. நான் என்பது யாருடையதோ அவனே அதற்கு உடையவனாவான். பின்பு, நீங்கள் எதைச் சொல்வீர்களோ, எதை நாடுவீர்களோ

அதுவே உண்டாகும். (குன்) ஆகு என்பதற்கு நீங்களே எஜமானாவீர்கள். மேலும் (பயகூனு) ஆகும் என்பதனுடைய தோற்றம், தமாஷh, விநோதம் உங்களுக்கு முன்னால் எழுநு;து நிற்கும். உங்களுக்குள்ளாலெ எந்தவிதமான உள்ளமையும் எஞ்சியிருக்காது. புகழ், இகழ் அத்தனையும் தூரமாகிப் போய்விடும். உங்களுடைய நன்மையையும், தீமையையும் நீங்கள் உணர மாட்டீர்கள். இதே மாதிரி சர்வ உலகத்திலும் ஒவ்வொரு அணுவினுடையவும் நன்மை, தீமையை உணர மாட்டீர்கள். ஒருவனும் உங்களுக்கு முன்னால் நல்லவனாகவோ கெட்டவனாகவோ ஆகமாட்டான். ஏனென்றால் நீங்களென்பதும், வேறு பொருள் உண்டென்பதும்கூட இல்லாமலாகிவிட்டது. எப்பொழுது ஒரு வஸ்து, வஸ்து என்றாகவில்லையோ அப்பொழுது அதிலிருந்து நன்மை, தீமை எப்படி உண்டாக முடியும்?

**(அல்ஹம்துலில்லாஹ்)** சர்வ புகழும் அல்லாஹ்வுக்கே உரியன. இந்நேரத்தில் நீங்கள் (அடிமைத் தளையை விட்டும்) சுயேச்சை என்ற பதவியை எட்டி விடுகிறீர்கள். ஆனால் அந்தப் பதவியை நீங்கள் எப்பொருளையாகிலும் காண வேண்டும், சேர வேண்டும் என்ற விருப்பங்கூட உங்களுக்கு இல்லாமலாகிப் போனாலேயாம். எதுவரையில் விருப்பம் இருக்கிறதோ அதுவரையில் நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் இருக்கும்வரையில் அவன் இல்லை. இதற்குத்தான் முஷாஹதா என்று சொல்வார்கள். இப்பொழுது தாத்துடைய இஸ்மு (அல்லாஹ்) வின் போட்டோ மனதில் பதிய வைக்கத் தேவையில்லை. மேலும் இஸ்முடைய அவசியமுமில்லை. பரிசுத்த தாத்தின் தோற்றமே போதும். ஆனாலும் ஆரம்பத் திசையிலுள்ளவர்களுக்கு ஐக்கிய நிலை ஏற்படாமலிருக்கும்போது அவர்களுக்கு திக்ரு சொல்லி கொடுக்கப்படுகிறது. முறாகபா என்பது மனம், நாவு, காது எல்லாம் ஒன்று சேருவதாகும். நீங்கள் மனதின் நாவிலே ஒருமுறை அல்லாஹ்-இன்னொரு முறை அல்லாஹ் என்ற திக்ரைக் கண்ணை மூடிக் கொண்டும், எல்லா உலகமும் நீங்களும் எப்படி உங்களின் கண்ணை விட்டும் நீங்கிவிட்டதோ அதே மாதிரி யதார்த்தத்திலேயே அவைகளெல்லாம் இல்லை என்று நிச்சயித்துக் கொண்டு திக்ரு செய்யுங்கள். மேலும் ஒவ்வொரு விடுத்தமும் அல்லாஹ் என்று சொல்லும் போதெல்லாம் ஹக்குத்தஆலாவின் (தஜல்லீ) தோற்றம் உங்கள் ஹிருதயத்தில் ஆகிக் கொண்டிருக்கிறதென்றும், நீங்கள் மடக்கி மடக்கி திக்ரு செய்யும் போதெல்லாம் அவனுடைய தாத்து எனும் சமுத்திரம் பெரும் சக்தியோடும் கொந்தளிப்போடும் தோற்றத்தில் வந்து கொண்டிருக்கிறதென்றும் நிச்சயித்துக் கொள்ளுங்கள். இப்படியே அந்தச் சமுத்திரம் முழு உலகத்தையும் சூழ்ந்து கொண்டது. முழு உலகமும் நீங்களும் இல்லாமலாகிவிடுகிற வரையிலும் அந்நேரத்தில் உங்களுக்கு திக்ருடைய ஞாபகமும், திக்ரு செய்யப்பட்டவனுடைய ஞாபகமும் இராது. அப்போதுதான் தொழுகையைப் பூர்த்தி செய்தவர்களைப் போலாகிறீர்கள். எப்படித் தொழுகை அல்லாஹு அக்பரிலிருந்து ஆரம்பமாகி ஸலாமைக் கொண்டு முடிவடைகிறதோ அதேமாதிரி இந்த ரகசியத் தொழுகையும். அல்லாஹு அக்பர் கருத்து: முழு உலகத்தையும் இல்லாமலாக்குவது கொண்டு ஆரம்பமாகிறது. இல்லாமலாக்குபவனும் இல்லாமலாகும் பொருளும் இவ்விரண்டும் எப்பொழுது இல்லையோ அப்பொழுது இந்தத் தொழுகை ஸலாமத்தாக முடிவடைகிறது. எத்தகைய ஸலாமத்தேயானால், எல்லாத் துன்பங்களும் உங்களிலேயே மறைக்கப்பட்டிருக்கின்றன. எப்பொழுது நீங்களில்லையோ

அப்பொழுது எவ்விதமான துன்பமும் இல்லாமல் அடியோடு ஒழிந்து விடுகிறது. இத்தகைய ஈடேற்றமே ஈடேற்றமாகும். ஏனென்றால்,

اَلسَّلامَةُفِي الْعُزْلَةِ

(அஸ்ஸலாமத்து பில் உஸ்லத்தி)

'மறைந்திருப்பதிலேயே ஸலாமத்து (ஈடேற்றம்) இருக்கிறது' எப்பொழுது நீங்கள் இல்லாமை என்ற மறைவுக்குள்ளாகி விட்டீர்களோ அப்பொழுதுள்ள ஈடேற்றமே ஈடேற்றமாகும்.

இந்த கடிதம் அதிகம் நீண்டு விட்டது. இத்தோடு இதை முடிக்கிறேன். இதை உணர்ந்து, பின்பு ஏதேனும் சந்தேகம் ஏற்படின் தபாலில் தெரிவியுங்கள். இன்ஷாஅல்லாஹ் விபரமாக நான் பதில் எழுதுகிறேன். என்னுடைய இக்கடிதம் நீங்கள் அமல் செய்ய முன்மாதிரியாக இருக்கும். இதை உங்கள் முன்வைத்துத் தினந்தோறும் ஒருமுறை படியுங்கள். அதன்படி அமல் செய்யுங்கள். நமது குடும்பத்தினருக்கும் பிள்ளைகளுக்கும் மிக மிக ஸலாம்.

முற்றுப் பெறும்.

பஸலி 1345 | இப்படிக்கு

மஹர்மீ 1உ | (காதிமுல் கௌம்) சமூக ஊழியன்,

ஸர்க்கார் வாயிஸ் ஆலி, | **முஹம்மது அப்துல் காதிர் ஸூபி.**

ஹைதராபாத்.

*முற்றும்.*